# பிரதமர் யாழ் விஜயம்




# சுதந்திரன்
SUTANTIRAN

தொலை பேசி: 23411 விலை சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, புரட்டாதி 13 (29-9-74) ஞாயிறு செப். 29 றமழான் 12 புத்தகம் 28 இதழ் 5


# பகிஷ்கரிப்பு வேண்டுகோள்

# பூரண வெற்றி!

## இருநாட்களுக்கு பாடசாலை பகிஷ்கரிப்பு ஹர்த்தால், உண்ணுவிரதம், ஊர்வலம்!!

### செல்வா தலைமையில் எதிர்ப்பியக்கம் தீவிரம்!

சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமான பிரதமர் திருமதி பண்டாரநாயகா தமிழ் ஈழத் தலைநகரான யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் போது - மானமுள்ள தமிழ் மக்கள் அவரது விஜயத்தை முற்றுகப் பகிஷ்கரித்திடவேண்டும் என்று தமிழர் கூட்டணி விடுத்துள்ள வேண்டுகோள் தமிழ் மக்களிடையே பூரண ஆதரவைப்பெற்று வருகிறது. பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் யாவும் தீவிரமடைந்துள்ளன. பகிஷ்கரிப்பு இயக்கத்தை தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா அவர்கள் தாமே நேரடியாக முன்னின்று கவனித்து வருவது குறிப்பிடத் தக்கது.

பகிஷ்கரிப்பு வேண்டுகோளுக்கு, தமிழ் மக்கள்—குறிப்பாக வர்த்தகர்களும் மாணவ மாணவியர்களும்—பூரண ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

பிரதமர் வடக்கே செல்லும்போது—யாழ்ப்பாணம் மயான பூமிபோல் காட்சியளிக்கவிருக்கிறது!

பகிஷ்கரிப்பு, எதிர்ப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு அமையும்:—

O அக்டோபர் 3ம், 4ம் திகதிகளில்—இரு நாட்களும்—வடமாகாணம் முழுவதும் பிரதமர் வருகையை எதிர்த்து மாணவ மாணவிகள் பாடசாலைகளை முற்றுகப் பகிஷ்கரிப்பார்கள்.

O, அக்டோபர் 4ம் திகதி காலை முதல் மாலை வரை தமிழர் கூட்டணித் தலைவர்களும்

—5-ம் பக்கம் பார்க்க



## 1000க்கு 18பேர் மலையகத்தில் பட்டினிச் சாவு!

தொழிலாளர்களின் தோழர்கள் என்றும் சோசலிச வாதிகள் என்றும் தம்மைக் கூறிக்கொள்ளும் இன்றைய போலிச்சோசலிச ஆட்சியிலே — இந்நாட்டின் வருமானத்தில் எழுபது சதவீதத்தை உழைத்துத் தரும் மலையகத்தமிழர்கள் ஆண்டொன்றுக்கு ஆயிரத்துக்கு 18பேர் வீதம் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கின்றனர். 'சமதர்மம்' என்று வாய்ச் சவடால் அடித்து மக்களை வாட்டி வதைத்து வரும்இன்றைய பிற்போக்கு ஆட்சியிலேதான் தமிழ்ப் பாட்டாளிகளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

7.6 சதவீதமாக இருந்து வந்தபட்டினிச்சாவு, 9.8 ஆக மாறிஆண்டொன்றுக்கு ஆயிரத்துக்கு பதினெட்டுப் பேர் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கின்றனர்

—5-ம்பக்கம் பார்க்

யாழ் வளாகத்தில்

## தமிழ் மாணவர்களுக்கு கட்டாய சிங்களத் திணிப்பு!

'புதிதாக தொடங்கப்படும் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தில் பயிலவிருக்கும் தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் சிங்களம் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும்!''

சிங்கள ஏகாதிபத்திய வாதிகளுக்கு இனித்திடும் இந்தச் செய்தியை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவொன்றில் பேசிய இலங்கைப் பல்கலைக்கழக உபவேந்தர் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

(ஆதாரம் தினகரன்24-9-74)

இதே கூட்டத்தில், மேற்படி வளாகத்தில் பயிலும் சிங்கள மாணவர்களுக்கு தமிழும் ஒரு கட்டாய பாடமாகப் போதிக்கப்படும் என்று அவர் கூறியிருந்த

—5-ம் பக்கம் பார்க்க

## மீண்டும் 'கலப்புசாதி' பேச்சு!

''என்னைப்பொறுத்தவரையில் இந்நாட்டில் தமிழர் சிங்களவர் என்று இல்லாமல் எல்லோரும் ஒரே இனமாகத்தான் இருக்க வேண்டும்.''

—குமாரசூரியர்.
(வீரகேசரி 25-9-74)

## அச்சத்தில் எழுந்த பிதற்றல்

''பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் தமிழர் கூட்டணியினர் ஆர்ப்பாட்டம் செய்தால், சுதந்திரக்கட்சி கிளைகளைச்சேர்ந்த வாலிபர்கள் அதனை எதிர்த்து நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவர்!''

—குமாரசூரியர்
(வீரகேசரி 24-9-74)

# எட்டப்பர்கள் தவிப்பு! சிங்களப் பொலீஸ் குவிப்பு!!

### பிரதமரை வரவேற்பதற்கு தெற்கிலிருந்து ஆட்கள் 'இறக்குமதி'!

பிரதமர் விஜயத்துக்கு எதிராக வடக்கில் எழுந்துள்ள எதிர்ப்புணர்வுகண்டு சிங்கள அரசும், சிங்கள அரசின் தமிழ்க்கங்காணிகளான குமாரசூரியர், துரையப்பா, அருளம்பலம், தியாகராசா

—5-ம் பக்கம் பார்க்க

சிவகுமார் என்றிடும் போதினிலே....(9)

# உலகத் தமிழ் மாநாடும் 10-ம் திகதி படுகொலையும்!

**1974** தைத் திங்களில் ஈழத்தில் நடைபெற்ற 4வது உலகத்தமிழ் மாநாடு, ஈழத் தமிழினத்தின் அடிமை நிலையையும் அவதி நிலையையும் அகிலத்துக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

ஈழத்தமிழனுக்கு — அவனது சொந்த மண்ணில் — அவன் கொடியும் கொற்றமும் வைத்து ஆண்டிருந்த மண்ணில்—தமிழுக்காக ஒரு மாநாடு நடத்திடும் உரிமை கூட மறுக்கப்பட்டுள்ளது என்கிற உண்மை உலகுக்கு அப்போதுதான் தெரிய வந்தது.

சிங்கள ஆட்சியின்கொடிய குரூர வெறிப்போக்கையும் ஏகாதிபத்திய மனப்போக்கையும் உலகு அறிந்து கொண்டது இந்த மாநாட்டின் போதுதான்!

மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தக்கூடாது— கொழும்பில்தான் நடத்திட வேண்டும் என்று கொக்கரித்தது சிங்கள அரசு!

தமிழர்களாகிய நாங்கள் நடத்தும் மாநாட்டை எங்கே நடத்திடவேண்டும் என்று முடிவுசெய்யவேண்டியவர்கள் நாங்களே தவிர நீங்கள் அல்ல—எங்களுக்கு கட்டளையிட நீங்கள் யார்? திட்டமிட்டபடிமாநாட்டை எங்கள் தமிழ் மண்ணாகிய யாழ்ப்பாணத்திலேயே நடத்தி முடிப்போம்—என்று அறுதியிட்டுக் கூறியது ஈழத் தமிழினம்!

சிங்கள அரசின் வெறித்தனமான எதிர்ப்பு தமிழ் மக்களிடையே புதிய எழுச்சியை—உணர்ச்சியை ஆவேசத்தை கிளர்ந்தெழச் செய்தது!

எங்கும் விழிப்புணர்வும் விடுதலை ஆவேசமும் வீர சுதந்திரக் கனலும் மூண்டெழுந்தது.

தமிழ் ஈழம் விடுதலை பெற்றுவிட்டதோஎனும்படி எங்கணும் விழாக்கோலம் பூண்டது!

அரசின் எதிர்ப்புக்களை தூள்தூளாக்கி — அடக்குமுறைகளை உடைத்தெறிந்து —மாநாடு நடைபெற்றது!

தமிழ் சமுதாயத்தின் இத்தன்மான உணர்வின் ஈட்டிமுனையாக விளங்கினார் பேராசிரியர் சு. வித்தியானந்தன்!

தமிழுக்கு தொண்டுசெய்யும் தமிழனுக்கு — தடை செய்யும் நெடுங்குன்றம் தூள்தூளாயிற்று!

வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த பேராளர்கள், ஈழத் தமிழர்களின் மொழி, இன உணர்வுகளையும் தமிழ் பற்றையும் கண்டு பொங்கிப்பூரித்துப்போனார்கள்.

இம்மாநாட்டிலே— தமிழுணர்ச்சியின் வடிவமாக நின்று தொண்டர்களாகப் பணியாற்றியவர்களில் சிவகுமாரனும் ஒருவன்!

தமிழுக்கு எங்கு பெருமை கிடைக்கிறதோ அங்குநின்று தமிழன்னையின் புகழ் கேட்டு புளகாங்கிதம் அடைபவன் தம்பி சிவகுமாரன்!

தமிழுக்கும், தமிழனுக்கும் எங்கு தீங்கு ஏற்படக் கூடும்என்று அஞ்சுகிறோமோ அங்கெல்லாம் யாரும் அழைக்காமலே முன்வந்து தலைகொடுத்துப்பணியாற்றுபவன் தம்பி சிவகுமாரன்!

சிங்கள அரசின் எதிர்ப்பினால், செந்தமிழ் மாநாடு சீர்கெட்டு விடுமோ என்று உள்ளூர சிவகுமாரன்அஞ்சினான்! தமிழுக்கு ஆபத்து என்றால் தலைகொடுத்திடவும் அவன் தயாராகவேயிருந்தான்!

மாநாட்டுக்கு, வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த பேராளர்களுக்கெல்லாம், அவர்கள் மகிழத்தக்கவிதத்தில் உதவி புரிவதில் சிவகுமாரன் முன்னுக்கு நின்றான்!

சிரித்து சிரித்துப் பேசி வெளிநாட்டுப் பேராளர்களின் உள்ளங்களையெல்லாம் தன் கள்ளமற்ற உள்ளத்தால் கொள்ளைகொண்டான்!

மாநாட்டின் துவக்க நாளன்று ஒரு நிகழ்ச்சி...!

இப்போது சிங்கள சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் எடுபிடிகளுக்கு எடுபிடியாக விளக்கும் தமிழ் வித்துவான் ஒருவர் மாநாட்டு மண்டபத்துக்கு வெளியே நின்றபடி ஏதோ இரைத்து சத்தமிட்டுக்கொண்டிருந்தார்!

அவரைச் சுற்றி ஒரு கும்பலும் கூடி நின்றது!

சிவகுமாரன் அந்த இடத்தை நோக்கி விரைந்தான்!

கூடி நின்ற கும்பலை விலக்கிக்கொண்டு விஷயம் என்னவென்று விசாரித்தான்!

"நாங்கள் தமிழ் வித்துவான்கள் - நடப்பதோதமிழ் மாநாடு — எங்களுக்கு உள்ளே போக அனுமதியில்லை — இது என்னையா மாநாடு இது!" வித்துவான் அடித்துமுழக்கினார்!

சிவகுமாரன் அவரைப் பார்த்துச்சொன்னான் இப்படி—

"ஐயா ஏதோ தவறு நடந்துவிட்டது. உரியவர்களிடம் சொல்லி நாளை அதை நீக்கச்சொல்கிறேன். அதற்கு நான் பொறுப்பு— தயவுசெய்து தமிழுக்காக நடைபெறுகின்ற இந்த மாநாட்டின் தொடக்கத்தின் போதே இங்கிருந்து குழப்பம் விளைக்காதீர்கள்! வேண்டுமானால் தமிழுக்காக உங்கள் காலில் நான் விழுந்து வணங்கவும் தயார்!"

சிவகுமாரனின் கனிவான இந்த வேண்டுகோளின் பின்னர் வித்துவான் தனது சத்தத்தை நிறுத்திக்கொண்டார்!

இந்தச் சம்பவம்—தமிழுக்காக சிவகுமாரன் எதைச் செய்யவும் தயாராக இருந்தான் என்பதை எடுத்துக் காட்டியது!

சுயகௌரவத்தை விட, தமிழின் மானம் காக்கப்பட வேண்டும்—தமிழின் மானத்தைக் காத்திடமுடியுமென்றால் அதற்காக சுயகௌரவத்தையே விட்டுக்கொடுத்திட நேர்ந்தாலும் பரவாயில்லை என்பதே சிவகுமாரனின் கருத்தாக இருந்தது—

சிவகுமாரனின் உறுதியை எடுத்துக்காட்டும் மற்றோர் நிகழ்ச்சி...!

சனவரி ஒன்பதாம் நாள்— உலகத் தமிழ் மாநாட்டையொட்டிய ஈழத்தமிழர் வரலாற்றுப்பெருமை பேசும் ஊர்வலம் நல்லூர் சட்டநாதர் ஆலய முன்றலில் இருந்து காலை 10 மணிக்கு ஆரம்பமாக இருந்தது!

ஆனால் மத்தியானம் 12மணியாகியும்ஆரம்பமாகவில்லை!

அங்கே தம்பி சிவகுமாரன் தலைமையில் ஒரு சாத்வீகப் போராட்டம் நடந்துகொண்டிருந்தது!

காரணம் இதுதான்!

'எப்படை எதிர்த்து வந்தாலும் அஞ்சேன்' எனக் கர்ச்சித்தமாவீரன்பண்டார வன்னியன் — எனும் வாசகம் ஊர்வலத்தில் எடுத்து வரப்பட விருந்த ஒரு ஊர்தியில் பொறிக்கப்பட்டிருந்தது—

'அந்த வாசகத்தை அனுமதிக்க முடியாது' என்றார் பொலிஸ் அதிகாரி!

"அந்த வாசத்கத்தை உயிர்போனாலும் நீக்க மாட்டோம்; அதை அனுமதிக்க மறுக்கும் உங்கள் செயல் அநீதியானது; நீங்கள் உங்கள் பிடிவாதத்தை கைடுவிம் வரை ஊர்வலத்தை நகர விடமாட்டோம்!' என்று பொலிசாரிடம் உறுதியுடன் கூறினான் சிவகுமாரன்.

கூறிவிட்டு — நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களுடன் அந்த ஊர்தியின் முன்னால் உட்கார்ந்து சத்தியாக்கிரகம் பண்ண ஆரம்பித்துவிட்டான்!

இரண்டு மணிநேரம்நடைபெற்ற இந்தப்போராட்டத்தின் இறுதியில் வெற்றி சிவகுமாரனுக்குத்தான்! பொலிசார் தங்கள் பிடிவாதத்தை கைவிட்டனர்! ஊர்வலம் நகர்ந்தது!

"எப்படை எதிர்த்து வந்தாலும் அஞ்சேன் எனக் கர்ச்சித்த வீரபண்டார வன்னியனை" ஊர்வலத்தில் மாவீரன் சிவகுமாரன் பெருமிதத்துடன் வீரநடை போட்டு வந்த காட்சி என்றும் மறக்கமுடியாத காட்சியாகும்!

இப்படி சீருடனும் சிறப்புடனும் நடைபெற்ற மாநாடு கண்டு சிங்களச் சிறுமதியர்க்கு பொறுத்துக் கொள்ளவில்லை!

சனவரி 10ம் நாள் இரவு—

வீரசிங்கம் மண்டபத்தின் எதிரே கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தமிழர் வெள்ளம் திரண்டு நிற்கிறது!

வெளிநாட்டுப் பேராளர்களின் உரைகளைக் கேட்பதற்காக அவர்கள் ஆர்வமுடன் முண்டியடித்துக் கொண்டு திரண்டு நின்றனர்!

அவர்கள் முகங்களில் தான் எத்தனை மகிழ்ச்சி!

மாதர்கள், மங்கையர்கள் கைக்குழந்தைகள், மாணவிகள், வயோதிபர்கள், இளைஞர்கள் — நடுத்தரவ்யதினர் —இப்படி ஆர்வமுடன் திரண்டு இருக்கின்றனர்!

இதோ— திருச்சி ஜமால் கல்லூரிப்பேராசிரியர் நயினா முகம்மது அவர்கள் தமிழின் பெருமைப்பற்றி எடுத்து முழங்குகிறார்!

குண்டூசி விழுந்தால் கேட்குமளவுக்கு அமைதியாக—நிசப்தம் நிலவுகிறது!

திடீரென்று கிழக்குப்பக்கமாக மக்கள் சலசலத்து எழுகிறார்கள்! ஐயோ, ஐயோ, அம்மா, அம்மா என்ற அலறல் தொடர்ந்து எழுகிறது!

துப்பாக்கி வேட்டுச் சத்தம் எழுகிறது!

கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வெடிக்கின்றன!

குண்டாந்தடிகளால் மண்டைகளை அடித்துநொருக்கும் சப்தம் எழுகிறது!

பொலிசாரின் மிருகத்தனமான வெறித்தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!



எதிர்பாராத இத்தாக்குதலால்— மனிதவேட்டையால்—மக்கள் பட்ட அவதி...அல்லல்... அவலம்... ஐயையோ நினைத்தாலும் இப்போது நெஞ்சம் நடுங்குகிறது!

தாய்களும் சேய்களும் பிரிக்கப்பட்டன!

பொலிசாரின் சப்பாத்துக் கால்கள் தமிழர்களின் நெஞ்சங்களை பதம் பார்த்தன! தமிழ்ப்பெண்கள் மானபங்கம் அடைந்தனர்!

தமிழர்களின் சொத்துக்கள் பறிக்கப்பட்டன! உடைமைகள் பிடுங்கப் பட்டன!

வெளிநாட்டுப்பேராளர்கள் வெறித்தனமான முறையில் அடித்து நொருக்கப் பட்டனர்!

எங்கும் குரூரம்! அவல ஓசை! பயங்கரம்! பீதி!

இவ்வளவு பயங்கரங்களுக்கு மத்தியில் தங்கள் உயிரைத் திரணமாக கருதி —தமிழ் இளைஞர்கள் பலர் பொலிசாரின் அக்கிரமத்துக்கு ஆளாகி அவதிப்படும் தமிழ் பெண்களை, வயோதிபர்களை, வெளிநாட்டுப் பேராளர்களை— காப்பாற்றுவதில் ஈடுபட்டிருந்தனர்!

தம்பி சிவகுமாரன் குமுறும் எரிமலையானான்—கொந்தளிக்கும் புயலானான்! பாயும் புலியானான்! பகை முடிக்க கிளர்ந்தெழுந்தான்!

சிவகுமாரனால், அன்று காப்பாற்றப்பட்ட வெளிநாட்டுப்பேராளர்கள் பலர்! மானம் காப்பாற்றப்பட்ட தமிழ் மங்கையர் பலர்!

தன் உயிரைப்பற்றி அவன் அக்கறைப் படவேயில்லை — ஏனைய தமிழர்களைக் காப்பாற்றுவதில் அவன் துடிப்புடன் முனைந்து நின்றான்!

அதோ...!

கம்பிவேலிகளுக்கு இந்தப் பக்கத்தில்...!

தமிழ் கேட்க வந்த தமிழர்கள் ஏழுபேர் உயிர் மீட்கப் போராடிக்கொண்டிருக்கின்ற பரிதாபக்காட்சி...!

கம்பிவேலியில் மின்சாரம் பாய்கிறது! அதன்மேல் வீழ்ந்து கிடக்கின்றனர் இவர்கள்!

அவர்களில் 14வயதுச் சிறுவன் ஒருவன்...!

"அண்ணை — நான்சாகப் போகிறேன் அண்ணை — என்னைக் காப்பாற்றுஅண்ணை..." அந்த தமிழ்ச் சிறுவன் மரணக் குரல் கொடுக்கிறான்.

இந்தக் குரல் சிவகுமாரன் காதில் விழுகிறது — ஓடிச் சென்று அவனுக்கு கை கொடுக்க பாய்கின்றான்—

—5ம் பக்கம் பார்க்க

## சிவகுமாரனுக்கு பாரிஸ் தமிழர்கள் அஞ்சலி!

(பாரிஸ் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடாக வரும் 'தமிழோசை'யில் தமிழ் ஈழத்தின் மறைந்த மாவீரன் சிவகுமாரனைப் பற்றி 'ஈழச்சிங்கம்' சிவக்குமாரன்' எனும் தலைப்பில் 'அறையுஞ் சிறுத்தை' எழுதியுள்ள கவிதையை கீழே தருகிறோம்—ஆர்)

ஈழங்கண்ட சிவகுமாரன்
வேழங்கொல்லும் இளஞ்சிங்கன்
ஈந்துவிட்டான் இன்னுயிரை
வேட்கைத்தமிழ் ஈழம்மீட்க!
ஞாலம் காணு நல்மறவர்
ஞான்று உயிரை கொன்றுகொள்வர்?
பாலம் அமைத்து உரிமைவருமா?
பாதை சமைத்து விடுதலைவருமா?
ஒலக்குரலில் ஒடுங்கியமக்கள்
ஓர் உருப்பெற்று எழுந்திடல்வேண்டும்?
சிலத்தமிழீர் சிறுத்தைஇனத்தீர்
செம்மைவழியில் செய்க உரிமை!
ஈழச் சிங்கமே சிவக்குமரனே!
வெங்கனல் மறவா! வாழ்கநின் நினைவே!

# தமிழ் அன்னை வடிக்கிருள் கண்ணீர்

# சிங்கள அம்மைக்கு பன்னீரா?

## அரசியல் மேடை

அன்பு நண்பா,

சிங்களத்தின் முதலமைச்சர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா செந்தமிழ் ஈழத்துக்கு அக்டோபர் முதல்வாரத்தில் 'திக்' விஜயம் செய்கிருராம்! அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ் ஈழத்துக்கு 'ஆனந்த உலா' வருகிருராம் அம்மையார்! தமிழ் அன்னையை இரத்தக்கண்ணீர் வடித்திட வைத்துக் கொண்டிருக்கும் சிங்கள ஆட்சியின் தலைவியார், அந்த இரத்தக்கண்ணீரை துடைத்திட அல்ல — பார்த்து ரசித்திட வருகிருராம் பைந்தமிழர் பூமிக்கு! தமிழ் சமுதாயத்தின் விடுதலை உணர்ச்சியும், தன்மானமும் தமிழ் வேகமும் மங்கி மடிந்துவிட்டது என்ற தப்பான நினைப்பில்— அதிகாரமும் ஆட்சியும், இராணுவமும் பொலிசும் தம்மிடம் இருக்கின்றன என்கிற ஆணவ முனைப்பில் அம்மையார் வருகிருராம் யாழகம் நோக்கி!

நண்பா, அம்மையார் வருகிருர் என்றதும் ஆனந்தக்கூத்தாடுகிறது அடிவருடிகள் கூட்டம்! நீலச் சட்டையும், சிவப்புச் சட்டையும் போட்டுக்கொண்டு தமிழ் சமுதாயத்தை காட்டிக்கொடுத்து வயிறு வளர்த்துவரும் எட்டப்பர் திருக்கூட்டம், அம்மையாருக்கு குடை, கொடி ஆலவட்டம் பிடித்து நிலபாவாடை விரித்து, அம்மையாரின் கால்களைக்கழுவி அந்தப் 'புனித' நீரை பருகி அம்மையார் மனம் மகிழச் செய்து—இன்னும் ஏதாவது எலும்புத் துண்டு சிங்கள ஆட்சியிடமிருந்து பெற முடியாதா என்கிற நப்பாசையில் அம்மையாரை வரவேற்றிட தாழ் பணிந்து தயாராகக் காத்துக்கிடக்கிறது!

அம்மையார் யாழ்ப்பாணம் செல்லுவதற்கு முன்னரே சிங்கள இராணுவமும் பொலிசும் அங்கு பல ஆயிரக்கணக்கில் குவிக்கப்படுகிறதாம்; சி. ஐ. டி. யினர் பெருந்தொகையாக தெற்கிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றனராம்—ஏடுகள் கூறுகின்றன! இது ஒன்றே—அம்மையார் வருகைக்கு யாழ்ப்பாணத்தில் மூண்டுள்ள வலுவான எதிர்ப்புணர்வை—எடுத்துக்காட்டுகின்றதே!

நண்பா, ஆளுங்கட்சியினரும் அவர்களது எடுபிடிகளும் கூறிவருவதுபோல்—தமிழ் மக்கள் தமிழர் கூட்டணியில் நம்பிக்கையிழந்துவிட்டனர் என்ருல்—சிங்கள சிறீலங்கா சுதந்திரக் கட்சியையே ஆதரித்திடுகின்றனர் என்ருல்—அம்மையார் தமிழ் மக்கள் மத்தியிலே செல்லும்போது இராணுவமும் பொலிசும் ஏன்? ரத கஜ துரக பதாதிகள் ஏன்? சி. ஐ. டி. யினர் அங்கு குவிக்கப்படுவது ஏன்? இது ஒன்றே யாழகத்தில் பொங்கி வழிகின்ற எதிர்ப்புணர்வை எடுத்துக்காட்டிடவில்லையா?

சிறிமாவோ பண்டாரநாயகா அவர்கள் தனிப்பட்ட முறையில்—யாழ்ப்பாணம் செல்வாரானல், அதை யாரும் எதிர்க்கமாட்டார்கள். ஆனல் அவர் அங்கு தமிழ் சமுதாயத்தை அடிமைப்படுத்தியிருக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமாக வருகிருர்! தமிழ் மக்களுக்கு கொடுமைக்குமேல் கொடுமை இழைத்து அடக்கியொடுக்கிவரும் ஆட்சியின் தலைவியாக வருகிருர்! தமிழுரிமைகளை மறுத்து தமிழ் சமுதாயத்தை நசுக்கிவரும் சிங்கள ஆட்சியின் முதல்வராக வருகின்ருர்! எனவேதான் அம்மையாரின் விஜயத்தை மானமுள்ள தமிழ்ச் சமுதாயம் இன்றைக்கு முனைப்பாக எதிர்த்து நிற்கின்றது!

அம்மையார் முதலமைச்சராகப் பதவியேற்றபின்னரும் சரி—அதற்கு முன்னரும் சரி—எப்போதாவது — தமிழ் சமுதாயத்தைப் பற்றி—தமிழ் மக்கள் என்று ஓர் இனத்தவர்கள் தனித்துவத்துடன் இந்நாட்டில் வாழுகிருர்கள் என்பது பற்றி—சிந்தித்ததுண்டா என்று துருவித் துருவிப் பார்ப்போமேயானல்—தமிழ்ச் சமுதாயத்தை அழித்தொழிப்பது எப்படி என்பது பற்றி அவர் சிந்தித்திருக்கக் கூடுமே தவிர வாழ வைப்பது பற்றிச் சிந்தித்ததுகிடையாது!

அம்மையார் 1970ம் ஆண்டு நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் முதன் முதலாக பேசிய கூட்டத்திலேயே—குருநாகலையில் என்று நினைக்கிறேன்—இந்நாட்டில் தமிழ் மக்களும் வாழுகின்ருர்கள் என்பதை அறவே மறந்து—சிங்கள மக்கள் என்னை ஆட்சிப் பொறுப்பில் ஏற்றியிருக்கிருர்கள்; அவர்களின் நலவுரிமைகளை நான் பேணிப்பாதுகாப்பேன்; என்று பச்சை வகுப்புவாதக் கோஷம் முழங்கியதை ஈழத் தமிழ் மகனல் என்ருவது மறந்திடமுடியுமா?

அம்மையாரின் முன்னுள் நீதியமைச்சராக இருந்த ஜெயமானே அவர்கள் மூதவையில் பேசும்போது, தமிழ் சமுதாயத்தை இகழ்ந்து வடக்கு இழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் இந்நாட்டின் வந்தேறு குடிகள்; அவர்களுக்கு எந்த சலுகைகளையும் வழங்குவதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை—என்று நாத்தடிப்புடன் தமிழினத்தை அவமதித்தபோது—அதையும் கேட்டுக்கொண்டு—அமைச்சரின் கூற்றை கண்டிக்காது—பேசாமடந்தையாக இருந்தவர்தானே இந்த சிறிமாவோ அம்மையார்!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் வந்தேறுகுடிகள்—என்று நாத்துடுக்குடன் தன்னுடைய முன்னாள் அமைச்சர் தமிழ் சமுதாயத்தை அவமதித்து—வரலாற்றையே திரித்து வம்புக்கிழுத்தபோது—அதை கேட்டுக்கொண்டு அமைதியாக இருந்த சிங்கள ஆட்சியின் தலைவிக்கு தமிழ் ஈழத்தில் கால்மிதித்திட என்ன தகுதி — யோக்கியதை—இருந்திட முடியும்?

அரசியல் நிர்ணய சபைக்கு வாருங்கள்—பிரச்சினைகளைப் பேசித்தீர்ப்போம்—புதிய அரசியல் யாப்பை உருவாக்குவோம்—என்று தமிழ் மக்களின் பிரதிநிதிகளை அழைத்துவிட்டு—அரசியல் நிர்ணய சபையில், தமிழ் மக்களின் தலைவர்கள் முன்வைத்த கோரிக்கைகளையெல்லாம் அதிகாரத்திமிருடன் தூசாகத் தூக்கியெறிந்துவிட்டு—சர்வ சிங்கள அரசியல் சட்டத்தை—தமிழ் சமுதாயத்தை அடிமை நிலைக்குத் தள்ளியதிட்டத்தை — கொண்டுவந்து நிறைவேற்றிய ஆட்சியின் தலைவியையா தமிழ் மக்கள் வரவேற்றிடுவது?

தமிழ் சமுதாயத்தின் இன, மொழி, மத அரசியல் அடிப்படை உரிமைகளையிட்டு ஆறு அம்சக்கோரிக்கையொன்றை முன்வைத்து—அதுபற்றி பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் தருக என்று தமிழர் தந்தை செல்வா அவர்கள் கடிதத்துக்குமேல் கடிதம் தீட்டியும், ஆணவ முனைப்புடன், அதிகார திமிருடன், ஏளனமாக எடுத்தெறிந்து—பதில்கூடத்தராது அரசியல் பண்பாடு மறந்து—தமிழ் சமுதாயத்தையே அவமதித்துள்ள சிறிமா அம்மையாருக்கா செந்தமிழ் மக்கள் வரவேற்பளித்திடுவது?

கல்வித்துறையில் "தரப்படுத்தல்" எனும் படுபாதகத்திட்டத்தைக் கொண்டுவந்து — தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு வேட்டு வைத்து—பல்கலைக்கழக பிரவேசத்தில் பச்சையான குறுகிய இனப்பாரபட்சமும் வேறுபாடும் காட்டி தமிழ் மாணவர்களுக்கு துரோகமிழைத்துவரும் சிங்கள ஆட்சியின் தலைவிக்கா தமிழ் மக்கள் சிந்து பாடிடுவது!

தமிழ் சமுதாயத்தின் அரசியல் உரிமைகளை கேட்ட ஒரே காரணத்துக்காக—தமிழ் ஈழத்தின் உணர்ச்சிக்கவி காசி ஆனந்தன், சேனதிராஜா, வண்ணை ஆனந்தன் போன்ற ஏராளமான இளைஞர்களை—வாழவேண்டிய இளம் காளைகளை—எவ்வித விசாரணையுமின்றி சிறையில் அடைத்து சித்திரவதை செய்து, அவர்களது இளமையை பாழடித்து—வாழ்வைச் சிரழித்து—நாள்தோறும் நந்தமிழ்க் காளைகளை வேட்டையாடி நான்காவது மாடிக்கு இழுத்து வந்து நையப்புடைத்து—நாவினல் சொல்ல முடியாத அளவுக்கு சித்திரவதைகளைப் புரிந்து கொடுமைப்படுத்திவரும் சிங்கள ஆட்சியின் தலைவிக்கா தமிழினம் மாலை சூட்டுவது? மலர்ச்செண்டு வழங்கிடுவது?

நண்பா, வெங்கொடுமைச் சிறையிலே—வீரமிகு நம் தமிழ்க்காளைகள் தமிழன்னையின் கண்ணீர் துடைத்திட சாக்காட்டை அணைத்திடவும் தயாராக இருந்திடும்போது—அன்னவரை ஈன்றெடுத்த அருமைத் தாய்க்குலம் குமுறியழுதிடும்போது—கோவேந்தும் தலைவிக்கா தமிழ் ஈழத்தில் கோலாகல வரவேற்புதந்திடுவது!

உலகத்தமிழ் மாநாட்டை கொழும்பில்தான் நடத்திட வேண்டும்—யாழ்ப்பாணத்திலே வைக்கக்கூடாது என்று சட்டம் போட்டு—அந்தச் சட்டத்தை தமிழ்க்குலம் உடைத்தெறிந்து வீறுடன் மாநாட்டை கடந்த தைத் திங்களில் யாழ்ப்பாணத் திருநகரிலே விறுவிறுப்பாக நடத்தியது கண்டு — உள்ளம் பொறுக்காது—தன்னுடைய பொலீஸ்படையைக் கொண்டு தமிழ் கேட்க வந்திருந்த ஐம்பதினுயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை மிருகத்தனமாக தாக்கி—தமிழ் பெண்களை மானபங்கப்படுத்தி—பத்துத் தமிழர்களை கொன்று குவித்து—வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களை தாக்கி வேட்டையாடி—யாழ்ப்பாணத்தில் ஒரு 'ஜாலியன் வாலாபாக்' கண்டு தமிழர்களின் இரத்தத்தடாகத்திலே நீச்சலடித்த சிங்கள ஆட்சியின் தலைவிக்கா தமிழ் மக்கள் பன்னீர்தெளித்திடுவது?

உலகத் தமிழ் மாநாட்டின் போது நடைபெற்ற மிலேச்சத்தனத்தை கண்டித்திட முன்வராத—மாநாட்டின்போது மானபங்கப்பட்ட கொடுமைப்படுத்தப்பட்ட — கொலைசெய்யப்பட்ட - தமிழ்மக்களுக்கு அனுதாபம்கூடத்தெரிவித்திடாத—அதுபற்றி விசாரணைக் குழு ஒன்று நியமித்து விசாரணை நடத்தும்படி தமிழர் கூட்டணி மட்டுமல்ல சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழ் எடுபிடிகளான குமாரசூரியர் போன்றவர்கள் கேட்டும்கூட—அதை பொருட்படுத்தாது நிராகரித்திட்ட சிறிமா அம்மையாருக்கா தமிழினம் ஆல வட்டம் வீசிடுவது?

எனவே நண்பா—தமிழ் சமுதாயம் மானமுள்ள—விடுதலை வீறுகொண்ட ஒரு சமுதாயம்—சுதந்திரம் கோரிநிற்கின்ற ஒரு சமுதாயம் என்பது உண்மையானல் சிங்களப் பிரதமரின் யாழ் வருகையை நூற்றுக்கு நூறு பகிஷ்கரித்து தன் வேகத்தை எடுத்துக் காட்டிடவேண்டும்.

அம்மையாரின் வருகையை எதிர்த்து தமிழர் கூட்டணியும் தமிழ் இளைஞர் பேரவையும் பகிஷ்கரிப்பு, ஹர்த்தால், உண்ணுவிரதம் போன்ற அறவழியிலான இயக்கங்களை நடத்திட தமிழ் மக்களை அறைகூவி அழைத்துள்ளது! இதற்கு முன்னர் தமிழ் ஈழத்தில் நடைபெற்ற ஹர்த்தால்களைவிட, பிரதமர் வருகையை எதிர்த்து நடைபெறுகின்ற ஹர்த்தால் மிகவும் பெரிய அளவில் வீறுடன் நடைபெறவேண்டியதன் அவசியத்தை தமிழ் மக்கள் அறிவார்கள்!

● அக்டோபர் 3, 4ம் நாட்களில் வட மாகாணம் முழுவதும் பாடசாலைகளையும், கல்லூரிகளையும் முற்ருகப் பகிஷ்கரித்து மாணவ சமுதாயம் தன்னுடைய எதிர்ப்பதைத் தெரிவித்திடவேண்டும்!

● அக்டோபர் 4ம் திகதி காலை கூட்டணித் தலைவர்களும் தொண்டர்களும் நல்லூர் கந்தசாமி கோவில் முன்பாக உண்ணுவிரதத்தில் ஈடுபடுவார்கள்!

● அக்டோயர் 5ம், 6ம், நாட்களில் (அதாவது பிரதமர் யாழகத்தில் தங்கும் நாட்களில்) வட இலங்கை முழுவதும் பூரண ஹர்த்தால் அனுட்டிக்க வேண்டும்!

● பிரதமர்செல்லும் வழியில் ஓர் இடத்தில் வைத்து கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்!

இவ்வாருகத் தமிழர் கூட்டணி, தன்னுடைய பகிஷ்கரிப்புத் திட்டங்களை முன் வைத்துள்ள அதேவேளையில் தமிழ் இளைஞர் பேரவை—பிரதமர் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு செல்கின்ற நாளான அக்டோபர் ஐந்தாம் நாள் மேற்படி கோவில் மண்டபத்தில் முற்றிலும் பெண்கள் மட்டுமே பங்குபற்றுகின்ற ஓர் உண்ணுவிரதத்தை நடத்தவுள்ளது. சிங்களப் பெண் பிரதயருக்கு தமிழ்ப் பெண்கள் வடிக்கின்ற கண்ணீராவது நெஞ்சைத் தொடுகிறதா என்று பார்த்திடுவோம்!

நண்பா, திட்டம் எங்கே, திட்டம் எங்கே என்று கேட்டு வந்த விடுதலை விரும்பிகளுக்கு நல்ல தீனி கிடைத்திருக்கிறது. தமிழர் கூட்டணியும், தமிழ் இளைஞர் பேரவையும் தந்திருக்கும் திட்டங்களை செயற்படுத்தி, பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை வெற்றியாக்கித் தந்திடும் பொறுப்பு தமிழ் சமுதாயத்தின் கையிலேயே—இளைய தமிழ் சமுதாயத்தின் கரங்களிலேயே இப்போது முழுவதும் தங்கியுள்ளது!

நண்பா, செந்தமிழ் அன்னை சிறையிடப்பட்டு தவிக்கையில் சிறிமாவுக்கு நம் தமிழ்ப் பூமியில் வரவேற்பு ஒரு கேடா? வெலிக்கடையிலும், கண்டியிலும், 4வது மாடியிலும், புதுக்கடையிலும் நம் இரத்தத்தின் ரத்தங்கள்—சதையின் சதைகள்—தங்கத் தமிழ் இளைஞர்கள்—சிங்கேறுகள், அடியும் உதையும் சித்திரவதையும் பட்டு விடுதலையின்றி கண்ணீர் வடிக்கையில் சிங்கள ஆதிக்கத்தின் சின்னமான சிறிமாவுக்கு தமிழினம் பன்னீர் தெளித்திடுவதா? தமிழ் ஈழ விடுதலைக்கு தன்னையே களபலியாக தந்திட்ட சிங்கேறு—மாவீரன் தியாக வீரன் சிவகுமாரனது கால்பட்ட தமிழ் மண்ணில் தமிழினத்தை அழிக்கும் ஆட்சியின் தலைவிக்கு குடை கொடி ஆலவட்டமா? சிவகுமாரன் தன்னைத்தானே களப்பலியாக விடுதலை வேள்வித் தீயில் அர்ப்பணித்த மகோன்னத தியாகம் வீணே அவம்போக விடலாமா?

நண்பா, கூடாது, கூடாது—தமிழ் சமுதாயம் ஒரு போதும் விடுதலைப்பாதையிலிருந்து மாருது; அடிமைத் தனமாக நடக்காது—தன் மானம்காத்தே தீரும்; பிரதமர் வருகையை பகிஷ்கரித்து தமிழினம் வீறு கொண்டெழுந்திடுவது நிச்சயம் என்கிருய் அல்லவா? அந்த நம்பிக்கை எனக்கும் ஆழமாக, அசைக்க முடியாத அளவில் உண்டு!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

# எண்ணம்

## அக்டோபர் இரண்டு!

அக்டோபர் இரண்டாம் நாள்! அகிலத்தின் வரலாற்றில் ஓர் பொன்னாள்!

கத்தியின்றி ரத்தமின்றி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் யுத்தம் புரிந்து இந்திய உபகண்டத்துக்கு விடுதலை வாழ்வு பெற்றுத்தந்த அண்ணல் காந்தி மகான் அவதரித்திட்ட திருநாள்!

வலிமை குறைந்த மக்கள் வலிமையும் ஆணவத் திமிரும், அதிகார முனைப்பும்கொண்ட ஏகாதிபத்தியத்தைகூட எதிர்த்து போராடி வெற்றிபெறமுடியும் — நீதியை வென்றெடுக்க முடியும்—என்கிற நம்பிக்கையை நமக்குத் தந்த காந்தியடிகள் அவதரித்திட்ட பெருநாள்!

இத்தகைய காந்தியடிகள் வகுத்தளித்துச் சென்றிட்ட அஹிம்சை நெறியிலே—அறவழியிலேதான்—இந்த நாட்டுத் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளையும் விடுதலையையும் மீட்டுக்கொள்வதற்காக போராடி வருகிறார்கள்!

சிங்கள ஏகாதிபத்தியத்தின் சர்வாதிகார அடக்குமுறைகளும் கொடுமைகளும் அதிகரித்திட அதிகரித்திட தமிழ் சமுதாயத்திலுள்ள வீராவேசம் மிக்க இளைஞர்கள் மத்தியில் அஹிம்சை மீதுள்ள நம்பிக்கை சற்றுத் தளர்ச்சியடைந்து வருவது உண்மைதான் என்றாலும் பொதுப்படையாக நோக்குமிடத்து, தமிழினம் இன்னும் அஹிம்சை நெறியில் முழுமையாக நம்பிக்கை இழந்துவிடவில்லை!

அக்டோபர் இரண்டு ஈழத்தமிழினத்திற்கு இன்னுமொரு வகையில் மிகமுக்கியமான தினமாகும்!

1972ம் ஆண்டு அக்டோபர் 2ம் நாள்தான் — ஈழத்தமிழினத்தின் காந்தியென்று கருதப்படும் தந்தை செல்வநாயகம் அவர்கள் ஒரு பெரும் சத்திய சோதனையில் குதித்தார்!

ஆம்—புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்கிற சிங்கள ஆட்சியாளரின் பொய்யான பிரசாரத்தை சுக்குநூறாக்கிடவும்— தமிழ் சமுதாயம் புதிய அரசியல் சட்டத்தை எவ்வளவு தூரம் வன்மையாக எதிர்த்து நிற்கிறது என்பதை சனநாயக முறையில் உலகின் முன் வைத்திடவும் — தந்தை செல்வா அவர்கள் இந்த சத்திய சோதனையில் இறங்கினார்!

தாம் வகித்துவந்த காங்கேசன்துறை தேசிய பேரவை உறுப்பினர் பதவியை துறந்து அங்கு இடைத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அவர் ஆட்சியாளருக்கு வாய்ப்பு அளித்தார்!

“சிங்கள ஆட்சியாளர்களே! தமிழ் மக்கள் புதிய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டதாக கூறுகிறீர்கள்! நீங்கள் கூறுவது உண்மையானால் அதை நிரூபிப்பதற்கு இதோ உங்களுக்கு நானே வாய்ப்பு உண்டாக்கித் தந்திருக்கிறேன்—காங்கேசன்துறைத்தொகுதியில் இடைத்தேர்தலை நடத்துங்கள்! அரசாங்கத்தின் சார்பில் யார் வேண்டுமானாலும் போட்டியிடுங்கள்! தமிழர் கூட்டணி சார்பில் நான் போட்டியிடுகிறேன்! இதில் நான் தோல்வியடைந்தால் அரசியலிலிருந்தே ஒதுங்கிவிடுகிறேன் — நீங்கள் தோல்வி அடைந்தால், புதிய அரசியல் சட்டத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்று பொய்பேசுவதை நிறுத்துங்கள்!!

இவ்வாறு தந்தை செல்வா அவர்கள் — சிங்கள ஆட்சிக்கு சவால் விடுத்து—சத்தியசோதனையில் இறங்கியது 1972ம் ஆண்டு அக்டோபர் 2ம் நாள்தான்!

இந்த ஆண்டு அக்டோபர் 2ம் நாளுடன் இரண்டு ஆண்டுகள் முடிவடைகின்றன! சத்தியத்தை நேருக்கு நேராகச் சந்தித்திட அஞ்சும் பொய்யர்கள் ஆட்சி—அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இரண்டு ஆண்டுகளாக இடைத்தேர்தலையே நடத்தாமல் அதிகாரத்திமிருடன் இறுமாந்து கிடக்கின்றது! ஏளனம் பேசி வருகிறது!

இரண்டு ஆண்டுகளாக காங்கேசன்துறைத்தொகுதி மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது!

சிங்கள நாட்டில் எல்லா இடைத்தேர்தல்களையும் நடத்தி முடித்து அதில் எல்லாம் பட்டை நாமம் போட்டுக்கொண்ட ஆட்சியாளர்கள்—காங்கேசன்துறை வாக்காளர்கள் தரவிருக்கும் மரண அடியை எண்ணி எண்ணி அஞ்சி நடுங்கிக்கொண்டு—அதன் காரணமாக பல்வேறு சாக்குப் போக்குகளை கூறி இடைத்தேர்தலையே நடத்தாது சனநாயகத்தின் குரல்வளையை நெறித்து வருகின்றனர்!

காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்துவதில்— இரண்டு ஆண்டுகளாக ஆட்சியினர் வேண்டுமென்றே காட்டி வரும் காலதாமதமே அவர்களது படுதோல்வியையும் ஆற்றாமையையும் பொய்மையையும் எடுத்துக்காட்டி விட்டது!

என்றோ ஒரு நாள் இவர்கள் இடைத்தேர்தலை சந்தித்தே தீரவேண்டி வரும்! அப்போது சத்தியம் பெறப்போகும் பெருவெற்றியை நாடும், உலகும் காணத்தான் போகிறது!

காங்கேசன்துறை தொகுதிமக்கள் ஈழத்தமிழ் சமுதாயத்தின் சார்பில் இடைத்தேர்தலில் தரவிருக்கும் தீர்ப்பு சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு விழுகின்ற மரண அடியாக அமையப்போகிறது!

தந்தை செல்வா மேற்கொண்டுள்ள சத்தியசோதனை— சிங்கள ஆட்சிக்கு நித்திய வேதனையாகவே முடியும் என்று எச்சரிக்கிறோம்!

# வடக்கே செல்லும் பிரதமரைப் ‘பேய்க்’ காட்ட அடிவருடிகள் நடத்தும் தில்லுமுல்லுகள்!

1954ல் சேர் ஜோன் யாழகம் வந்த போது ஆர்ப்பாட்டம் நடத்திய தளநாயகன் அமிர் இன்று தமிழர் பாசறையின் செயலாளர் நாயகமாக விளங்குகின்றார். இன்றைய கூட்டணியின் எதிர்ப்பு மிகவும் பலம் வாய்ந்ததாக இருக்கும் என்பதற்கு அஞ்சவேண்டிய தேவை இல்லை.

சேர் ஜோனுக்கு வரவேற்புக் கொடுத்தபோது யாழ். மாநகர சபையில் பெரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. தெரிந்தெடுத்துக் குறிப்பிட்டவர்களுக்கே வழங்கப்பட்டன அழைப்பிதழ்கள். ஆனால் நகரமண்டபத்திற்குள்ளேகாட்டப்பட்ட கறுப்புக் கொடிகளோ நூற்றுக்கும் அதிகம். எதிர்ப்புச் சுலோக அட்டைகளோ அதனிலும் அதிகம். அதனால் குறுந்தடிப்பிரயோகம் நகர மண்டபத்திற்குள்ளேயே நடத்தப்பட்டது.

அவ்வரவேற்பைக் கொடுத்த முன்னாள் நகர முதல்வர் “நிறுத்துங்கள் தாக்குவதை—இல்லா விட்டால் வரவேற்பே கைவிடப்படும். ஜனநாயக நாட்டில் எவ்வாறு ஒருவரை வரவேற்க ஒருவனுக்கு உரிமை உள்ளதோ அதே போல் கறுப்புக்கொடி காட்டவும் உரிமை உண்டு. தக்காளிப் பழ அபிடேகம் செய்யவும் உரிமை உண்டு” என்று நினைவுறுத்தினார்.

அந்நிகழ்ச்சியையும், அவரையும் இப்பொழுது நினைவு கூருவது சாலப் பொருந்தும்.

ஃ

எங்கும் நீலம், எதிலும் நீலம், யாழ் நகரிலல்ல மாறாக யாழ். மாநகர (மாநரக) கட்டிடங்கள் துண்டுப் பிரசுரங்கள், சோடனைகள் எங்கும் நீலம் அடித்து வருகின்றார் துரோகப்பர். ஏன்? அமைதியாக இருக்கும் தெய்வமாம் வைரவர் கேட்கமாட்டார் என்ற துணிவில் ஈச்ச மொட்டை வயிரவகோவில் சுவரும் நீலத்திற்கு இரையாகி விட்டது. ஆனால் நீலமடிக்கும் திருவாளர் தனது காரில் நீலக்கொடி போடாதது ஏன்? இதற்குள் இருக்கும் மர்மம் யாதோ?

தனது காரில் நீலக்கொடி போடாமைக்கும், ஆண்டவனிடத்தையே நீலமாக மாற்றியமைக்கும் காரணமறியாமல் கொதிப்படைந்துள்ளனர் சைவப் பெருமக்கள்.

மதில் மேல் பூனையாக இருந்து பத்திரிகை மசோதாவில்செய்ததைப்போன்று மீண்டும் எதுவும் வரலாம் அப்பொழுது பாயலாம் என்பதுதான் நீலக்கொடிகட்டாமைக்குக் காரணம் என்று எல்லோரும் பேசிக்கொள்கின்றார்கள். மீண்டும் காலரா வராதா தப்பிவிடலாமே என்று துடியாய்த் துடிக்கிறாராம் இந்த ஆள் பிரட்டி!

ஃ

காரியாதிகாரிகள் மாதர் சங்கங்களை அழைத்துக் கலைவிழா நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யும்படி கேட்டுள்ளார்களாம். ஆனால் எதற்கு, ஏன் என்று காரணம் கூறவில்லையாம். பின்னர் இவற்றை பிரதமரை வரவேற்கப் பாவிப்பதற்காம். முன்னமேயே சொன்னால் மாதர்கள் மறுத்துவிடுவார்கள் என்பதுதான் காரணம். என்றாலும் மாதர்கள் மிகவும் விழிப்போடு இருக்க வேண்டும்!

ஃ

சிங்களக் குடியரசுப் பிரதமரது யாழ்ப்பாண வருகையின் போது அவருக்குச் சிறப்பான வரவேற்புக் கிடைத்ததாகப் பறை சாற்றப் பல தில்லு முல்லு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் ஒரு வகையே பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, திடீரென உற்பத்தி செய்யும் “திடீர் கமக்காரர்”!

பலாலி விமான நிலையத்தில் நடக்கும் வரவேற்பில் மேற்படி ‘திடீர் கமக்காரர்’ மட்டுமல்ல சாதாரண உடையணிந்த முப்படை வீரர்களும், பொலிசாரும் தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவர்களும் கலந்துகொள்ள இருக்கிறார்களாம். வரவேற்றவர்களின் தொகையைப் பெருக்கிக்காட்டுவதற்கு இத்தனை முயற்சி.

இவ்வகைக் கோமாளித்தனம் முன்பும் நடைபெற்றதாம். சேர். ஜோன் கொத்தலாவலை பிரதமராக இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த பொழுதே — 1954ல் — இவ்வகைக் கோமாளித்தனம் நடைபெற்றதாம். அன்று யாழ்ப்பாணம் வந்த சேர் ஜோன் ஊர்காவற்றுறைக்கு அரசராகவும், நெடுந் தீவுக்குச் சக்கரவர்த்தியாகவும் ஆக்கப்பட்டார் — காகித அட்டை முடிசூடி.

பாவம், சேர் ஜோன் திருவாய் மலர்ந்தார் சம அந்தஸ்து என்று யாழ்ப்பாணத்தில்! களனியில் நிறைவேற்றினார் சிங்களம் மட்டும் என்று. தோல்வியடைந்தார் 1956ல்! அடைந்தார் அரசியல் அஞ்ஞாத வாசம்! அவர் போன்று அம்மையாரும் உரிமைகள் தருவதாக ஏதாவது பசப்புமொழி பேசுவார் யாழகத்தில்—இவை எல்லாம் தலைநகர் போகும் வரைதான்!

ஃ

திடீர்ப் பலகாரங்கள், தோன்றியிருப்பது போல் திடீர் விவசாயிகளும் உற்பத்தி செய்யப்படுகிறார்களாம். இவ்வகை முயற்சியில் பெரிய சாதனையைக் காட்டப் போகின்றதாம் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி. பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிலுநர்களாக உள்ள ஆசிரிய மாணவர்களை விநோத உடைப்போட்டிக்குக்கோலம் மாறுவது போன்று கமக்காரர் வேடம் அணிந்து பலாலி விமான நிலைய வரவேற்பில் கலந்துகொள்ளும்படி கேட்கப் பட்டிருக்கிறார்களாம்.

இவ் விவசாயிகளை அறுவடை செய்யும் திட்டம் பரமஇரகசியமாகத் தீட்டப் பட்டதாம். இவ்வாறுசெய்து பலாலியில் வரவேற்றவர்கள் யாழ் விவசாயிகள் என்று பறை சாற்ற முனைகின்றார்கள்.

ஏனெனில் உண்மையான யாழ் விவசாயிகள் வரவேற்புக்களில் பங்குபற்ற மறுத்ததுடன் பகிஷ்கரிக்க வேண்டும் பண்டாரநாயக்க அம்மையாரை என்று நேரடியாகக் கூறிவிட்டார்கள். ‘கமக்காரர் தட்டுப்பாடு’ ஏற்படவே திடீர் அமைச்சர் திடீர் விவசாயிகளை உண்டாக்க முனைந்துள்ளராம், பாவம்.

அதே நேரத்தில் சோஷலிச முன்னேற்றம் பற்றியும், வேறு பலவித முன்னேற்றம் பற்றியும் அரசினர் காட்டும் செய்திப் படங்களிலும் இவ்வகைத் ‘திடீர்’ ‘திடீர்’ தயாரிப்புக்கள்தான் தோன்றுகின்றனவா என்று மக்கள் அங்கலாய்க்கிறார்கள்!

(உரும்பராய் நிருபர்)

பலாலியில்

## தமிழர் கூட்டணியின் மாபெரும் கூட்டம்

பிரதமர் விஜயத்தைப் பகிஷ்கரிக்கக் கோரும் தமிழர் கூட்டணியின் மாபெரும் கூட்டம் ஒன்று பலாலி பிள்ளையார் கோவில் முன்றலில் 28-9-74 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு தந்தை செல்வா தலைமையில் நடைபெறும்.

திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம், சி. கதிரவேற்பிள்ளை, வி. ஆனந்தசங்கரி பண்டிதர் இரத்தினம் உட்பட பலர் பேசுவர்.

## சூரியரே! சூரியரே!!

“உரிமை என்பது கேட்டுப் பெறும் பொருள் அல்ல”

—குமாரசூரியர்

—அப்படியானால்—போராடித்தான் உரிமைகளை வென்றெடுக்கவேண்டும்! அப்படித்தானே அமைச்சரே! அவ்வாறு உரிமைகளுக்காக போராடிய தமிழ் இளைஞர்களை இரண்டு ஆண்டுகளாக நீரும் உமது எஜமானர்களின் அரசும் எதற்காக சிறையில் தள்ளி சித்திரவதை செய்து வருகிறீர்கள்?

## ஈழவேந்தன் பேசுகிறார்!

மூதூர் தொகுதியிலுள்ள வெருகல் முகத்துவாரம் பிள்ளையார் கோவிலில் அக்டோபர் 2ம், 3ம் திகதிகளில் திரு. ஈழவேந்தன் அவர்கள் முறையே “நாளும் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்” மணிவாசகர் கடவுளைக் கண்டாரா? ஆகிய தலைப்புக்களில் உரை நிகழ்த்துவார்!

## குமாரசூரியருக்கு பீட்டர்கெனமன் பதில்!

‘கறுப்புத்துணிப் போராட்டத்தால் தமிழர் கூட்டணியால் எதைத்தான் சாதிக்க முடிந்தது?

—குமாரசூரியர் கேள்வி (தினகரன் 25-9-74)

“யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானபீடம் இல்லாமல் பல்கலைக்கழக வளாகத்தை திறுவினால், தமிழரசுக் கட்சியினர் கறுப்புக்கொடி காட்டுவார்கள்!”

—தேசிய அரசுப் பேரவையில் பீட்டர் கெனமன் (முன்னர் பேசியது)

# பிரதமர் செல்லும்போது "மயானபூமிபோல யாழ் காட்சி தரவேண்டும்"

## பூரண ஹர்த்தால் அனுட்டிக்கும்படி உடுப்பிட்டி சிவா வேண்டுகோள்!

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது வேல்ஸ் இளவரசர் வருகையை இந்திய மக்கள் எப்படி பகிஷ்கரித்து ஹர்த்தால்நடத்திஎதிர்ப்புக்காட்டினர்களோ, அதே போல் தமிழ் மக்களும் சிங்களப் பிரதமரின் யாழ் விஜயத்தை பூரணமாக எதிர்க்க வேண்டும்.பிரதமர் யாழ்ப்பாணத்தில் இருக்கும் நாட்களில், யாழ்ப்பாணம் பூரணதுக்கம் அனுட்டித்து செத்த வீடாக — மயான பூமிபோல — காட்சித்தர வேண்டும்!"

இவ்வாறு வெள்ளவத்தை சரசுவதி மண்டபத்தில் கடந்த 22-9-74ல் நடைபெற்ற தமிழ்ப் பெரியார்கள் நினைவு விழாக் கூட்டத்தில் பேசிய உடுப்பிட்டி முன்னாள் பா. உ.வும் தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம் முழக்கமிட்டார்.

இவ்விழாவுக்கு ஆரம்பத்தில் திரு. கு. பாலசிங்கமும், பின்னர் இ. தொ. கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியும் தலைமைவகித்தார்கள்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

தமிழக மக்கள் மீது—இந்தி பேசாத மக்கள் மீது—இந்தியைத் திணித்துக்கொண்டு, அதே வேளையில் தமிழ் நாட்டில் சேலம் இரும்பாலைக்கு அத்திவாரமிட இந்தியப் பிரதமராக இருந்த பண்டித ஜவகர்லால் வந்த போது—இந்தியைத் திணித்தால் திணிக்கட்டும்; நமக்குதான் இரும்பாலை வருகிறதே என்று கூறிக்கொண்டு அண்ணுஅமைதியாகஇருந்துவிடவில்லை. நேருவுக்கு எதிராக பிரமாண்டமான முறையில் கறுப்புக்கொடி காட்டினுர்.

"அதே போலத்தான் — இன்றைக்கு யாழ்ப்பாணத்திற்கு பல்கலைக்கழக வளாகம் வருவதை ஒரு வரப்பிரசாதம் என்று சிலர் கூறித் திரிவதை வாதத்துக்காக நாம் ஏற்றுக்கொண்டாலும் தமிழர்களின் உரிமைகளை மறுத்து, தமிழினத்தை அடிமைப்படுத்தி அடக்கியொடுக்கி வரும் பிரதமரை நாம் எப்படி வரவேற்க முடியும்? எனவே அண்ணு காட்டிச் சென்ற வழியில் நின்று—தமிழர் உரிமைகளை மறுக்கின்ற சிங்களப் பிரதமரை எதிர்த்து ஹர்த்தால்நடத்துமாறு தமிழர் கூட்டணி தமிழினத்தை அறைகூவி அழைக்கிறது!"

சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில், ஆண்டபரம்பரையான தமிழினம், மீண்டும் ஆளும்நிலை தோன்றுவதற்கு தமிழர்கள் தொடர்ச்சியாக விடாப்பிடியாகப் போராட வேண்டுமென்றும், ஈழத் தமிழர் பிரச்சினை இப்போது சர்வதேசியப் பிரச்சினையாக மெல்ல மெல்ல வடிவம் எடுத்து வருகிறதென்றும் குறிப்பிட்டார்.

திரு. எம். எஸ். செல்லச்சாமி பேசுகையில் — தமிழர் கூட்டணித் தலைவர்களின் சொத்துக்களை பறிப்பதாலோ—சிறைக்குள் தள்ளுவதாலோ, நாம் தளர்ச்சியடைந்து விடமாட்டோம் விடுதலை பெறும் வரை போராவோம் என்ருர்.

மற்றும் திருவாளர்கள் —இளங்கோ, ஜேம்ஸ். ரி. இரத்தினம், பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. சிவராசா, ஈழவேந்தன், கரிகாலன், செல்வி அமுதா சொர்ணலிங்கம், ஐ. தி. சம்பந்தன்



சுதந்திரன் ஆசிரியர் திரு: கோவை மகேசன் ஆகியோரும் உரையாற்றினர்.

## சபாலிங்கம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டார்!

சிங்களச் சிறையின் கொடுமை தாங்காது கண்டிச்சிறைச்சாலையில் 3வது மாடியிலிருந்து கீழே குதித்து காயமடைந்த தமிழ் இளைஞரான திரு. சபாலிங்கத்துக்கு யாழ்ப்பாணத்தில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது தெரிந்ததே.

பிரதமர் யாழ்ப்பாணம் செல்லும்போது — இந்த இளைஞர் யாழ்ப்பாணத்திலிருப்பது "பாதுகாப்புக்கு" ஆபத்து என்று சி. ஐ. டி. யினர் கருதி அவர் பூரண குணமடைவதற்குமுன்னரே யாழ்ப்பாணத்திலிருந்து அவசரமவசரமாக விமானத்தில் கொழும்புக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டு, வெலிக்கடைச்சிறை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளாராம்!

### புஷ்பராசா

சி. ஐ. டி. யினரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. சி. புஷ்பராசா தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்!

### நடேசானந்தம்

புதுக்கடைச் சிறைச்சாலையில் ரிமாண்ட்டில் வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு—அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவைச்செயலாளர் திரு. பூ. நடேசானந்தம் இப்போது தடுப்புக்காவலில் அதே சிறையில் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் கொழும்பு நீதிமன்றத்துக்கு அடையாள அணிவகுப்புக்காக கொண்டு வரப்பட்டபோது தமிழர் கூட்டணித்தலைவர்களில்ஒருவரான சட்டத்தரணி திரு. மு. சிவசிதம்பரம் ஆஜாராகி வாதாடியது தெரிந்ததே!

### மட்டுநகரில் மேலும் 3 இளைஞர் கைது!

பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த ஒந்தாச்சிமடம் கிராமத்தைச்சேர்ந்த எஸ். கருணாநிதி, மட்டக்களப்பை சேர்ந்த, ராஜ்மோகன், கல்குடாத்தொகுதியைச்சேர்ந்த திரு. ஆலாலசுந்தரம்—ஆக மூவர் புதிதாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ராஜ்மோகனும், ஆலாலசுந்தரமும் பின்னர் விடுதலைசெய்யப்பட்டனர்.

பேருந்து பெயர் பலகையில் தமிழைப்பெரிதாக எழுதியதற்காக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம்!

### தமிழ் மாணவர்களுக்கு...

—1ம் பக்கத் தொடர்

போதிலும். அது வெறும் கண்துடைப்புக்காக "ஒப்புக்குக்" கூறப்பட்டதென்றே கருதப்படவேண்டியுள்ளது.

வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ் மாணவர்களுக்கு சிங்களம் ஒரு கட்டாய பாடமாக திணிக்கப்படுகிறது, அதே சமயத் சிங்கள மாணவர்களுக்கு தமிழ் கட்டாயபாடமாகப் போதிக்கப்படுவதில்லையென்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

யாழ்ப்பாண வளாகத்தின் பின்னல் மறைந்துகொண்டு தமிழ் சமுதாயத்துக்கு வரவிருக்கின்ற ஆபத்துக்கள் ஒவ்வொன்ருக இப்போது தெரிய ஆரம்பித்துள்ளன.

### 1000க்கு 18 பேர்...

—1-ம் பக்கத் தொடர்

பிறப்பு, இறப்புப் பதிவுத் திணைக்களம்வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்த உண்மை அம்பலமாக்கப்பட்டுள்ளது.

### எட்டப்பர்கள்...

—1-ம் பக்கத் தொடர்

போன்ருேரும் பெரும் பீதியடைந்துள்ளதாகத் தெரிகிறது. வடக்கே சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வளர்ந்துள்ளதாகவும், தமிழர் கூட்டணி சரிந்து விட்டதாகவும் பிரதமருக்கு இதுவரை அடித்துவந்த 'டுப்' எங்கே அம்பலமாகிவிடுமோ என்று இவர்கள் நடுங்க ஆரம்பித்துள்ளனராம்!

பிரதமர் வடக்கே வந்து—தமிழர் கூட்டணிக்கிருக்கும் அசைக்கமுடியாத செல்வாக்கை நேரடியாக கண்டு கொண்டால் — சுதந்திரக் கட்சியை வடக்கே இப்படித்தான் வளர்த்தீர்களா? என்று கோபித்துக் கொள்வார்; அதனல் எதிர்காலத்தில் தங்கள் பிழைப்பிலும் மண்விழுந்துவிடும் என்று தவியாய்த் தவிக்கும் இந்த எட்டப்பர்கள், தென்னிலங்கையிலிருந்தாவது ஆட்களை ஏற்றி வந்து வடக்கே இறக்கி பிரதமருக்கு 'கூட்டம்' சேர்க்க முயற்சிக்கிருர்களாம்! கல்லாநிதியும் இதற்கு உடந்தையாக இருக்கிறதாம்!

பிரதமரை வரவேற்பதற்கு தென்னிலங்கையிலிருந்து ஆள்திரட்டி, வடக்கே அனுப்பப்படலாம் என்றும், யாழ்ப்பாணத்தை 'ஓசியில்' பார்ப்பதற்கு இதனல் பலர் முன்வரக்கூடும் என்றும் தெரிகிறது.

வித்தியாலங்கார, வித்தியோதயா, கொழும்பு, பேராதனை ஆகிய பல்கலைக் கழக வளாகங்களைச் சேர்ந்த சுதந்திரக்கட்சி மாணவர்களும் பிரதமரை வரவேற்க வடக்கே செல்வார்களாம்!

கூட்டுறவுக் கடைகள், கிராமவங்கிகள், யாழ்ப்பாணம் மாநகர சபை போன்றவைகளின் ஊழியர்களுக்கு பிரதமரை வரவேற்பதற்கு பலாலி விமான நிலையத்திற்கு வரவேண்டுமென்று கட்டாய உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

தமிழ் மக்கள் பிரதமர் விஜயத்தை முற்ருகப் பகிஷ்கரித்தாலும், இப்படிப்பட்ட ஒரு "FLOATING AUDIENCE" சை வைத்துக்கொண்டு விஷயத்தை சமாளித்து விடலாம் என்று அரசு ஆதரவாளர்கள் நம்புகிருர்களாம்.

பிரதமர் விஜயத்தை முன்னிட்டு வடக்கே ஆயிரக்கணக்கான பொலிசார் அனுப்படுகின்றனர்; இது ஒன்றே தமிழ் மக்கள் மத்தியில் அரசுக்கும், பிரதமர் விஜயத்துக்கும் எதிராக மூண்டுள்ள எதிர்ப்புக்கு தகுந்த சான்ருகும் என்று தமிழர் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்,

### பகிஷ்கரிப்பு வேண்டு...

—1-ம் பக்கத் தொடர்

தொண்டர்களும் நல்லூர் கந்தசாமி கோவில் வாசலில் உண்ணுவிரதம் இருப்பார்கள்.

- அக்டோபர் 5,ம் 6ம் திகதி வடமாகாணம் முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டு பரிபூரண ஹர்த்தால் அனுட்டிக்கப்படும்!
- பிரதமர்செல்லுகின்ற பாதையில் ஓர் இடத்தில் வைத்து தமிழர் கூட்டணித் தலைவர்கள், பா- உ.க்கள் பிரமுகர்கள் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள்.
- தமிழ் இளைஞர் பேரவையினர் அக்டோபர் 4ம் திகதி பிரதமர் வருகையை எதிர்த்து யாழ். கோட்டை மைதானத்திலிருந்து நல்லூர் கந்தசாமி கோவில்வரை மௌன ஊர்வலமொன்றை நடத்துவார்கள்!
- அக்டோபர் 5ம் திகதி சனிக்கிழமை — பிரதமர் வரும்போது — நல்லூர் கந்தசாமி கோவில்மண்டபத்தில் தமிழ்ப் பெண்கள் உண்ணுவிரதம் அனுட்டித்து தங்கள் எதிர்ப்பைக் காட்டுவார்கள். இந்த உண்ணுவிரதத்தில், சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களின் தாய்மார், சகோதரிகள், மற்றும் உறவினரும் பங்கு பற்றவுள்ளனர்.

"பனைச் செல்வம் தொழிற் செல்வம்."
15 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளை அனுப்பி
பனைமர சோபனம்
என்ற புத்தகத்தைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க் வைற் சவர்க்காரத் தொழிற்சாலை,
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

வாங்கிவிட்டீர்களா?
அனைத்துலக நீதிச்சபை முன் இலங்கைத் தமிழர் பிரச்சினை!
சிங்கள ஏகாதிபத்தியம் பற்றி தந்தை செல்வா சமர்ப்பித்த முறையீடு—
அழகிய மூவண்ண அட்டை
விலை தனிப் பிரதி ரூபா 2.00
வியாபாரிகளுக்கு பிரதியொன்றுக்கு 25 சதம் கமிஷன் உண்டு.
தனிப்பிரதிவேண்டுவோர் பிரதியொன்றுக்கு ரூபா 2.60க்கு தபால்தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு கொள்க:-
நிர்வாகி, சுதந்திரன்
194 ஏ. பண்டாரநாயக வீதி, கொழும்பு-12.

# எருமைப்பாடு மாநாடு!

**காட்டில் 'எருமைப்பாடு மாநாடு' தடபுடலாக ஆரம்பமாகிறது. முன்கூட்டியே காட்டு அரசாங்க சார்பில் வெளிவரும் "வனகரன்" செய்தித்தாளில் 'அதோ வருகிறது—இதோ வருகிறது' என்று பெருமளவில் விளம்பரம் செய்யப்பட்டு வந்த 'எருமைப்பாடு மாநாடு' சிங்கங்களின் குகைகள் சார்ந்த பிரதேசத்தில் கோலாகலமாக இதோ துவங்குகிறது.**

சிங்கமகாராணி அரிமாவோ அம்மையாரின் உதவியோடு காட்டு அரசாங்க வாகனங்களில் ஏற்றி இறக்கப்பட்ட சிங்கங்களும் எருமைகளுமாக மாநாட்டு மண்டபம் நிரம்பி வழிகிறது. மாநாட்டை ஒழுங்கு செய்திருந்த முற்போக்கு எருமைகள் சங்க' உறுப்பினர்கள் முகம் மலர மாநாட்டு மண்டப முன் வரிசை நாற்காலிகளில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

"எருமைப்பாடு மாநாட்டை" நாமெல்லாம் பார்த்து மகிழ்வதற்கு முன்பு இந்த மாநாட்டின் மூலகாரணத்தைத் தெரிந்துகொள்வது நல்லது. அப்போதுதான் மாநாடு சுவையாக இருக்கும். புரிகிறதா?கேளுங்கள்—

ஒரு பாவமும் அறியாத எருமைகளின் பசும் புல்வெளிப் பகுதியை ஆக்கிரமித்து—உணவுக்காக மட்டுமின்றி வெறித்தனமாகவும் அவைகளைக் கொன்று-காட்டில் வெறியாட்டம் போட்டன சிங்கங்கள். இந்த அநியாயத்தை சாதுக்களான எருமைகளால் சகித்துக்கொள்ள இயலவில்லை. பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? எருமைகள் போர்க்கொடி உயர்த்தின. வெறிச் சிங்கங்கள், எருமைகளின் ஒற்றுமையையும் விடுதலை உணர்ச்சியையும் கண்டு மருண்டன. எருமைகளை மடக்க சிங்கங்களின் சதித் திட்டம் உருவாயிற்று.

"எல்லா சமுதாயத்திலும் துரோகிகள் இல்லாமலா போவார்கள்? நமக்குச் சார்பாக அங்கே சில துரோகிகளைப் பிடித்து எடுப்போட அப்புறம் எருமைகளை மடக்கிவிடலாம்" என்று மகாராணி அரிமாவோ அம்மையார் தனது மந்திரிச் சிங்கங்களுக்கு ஆலோசனை கூறினார்.

விளைவு—

எருமைகளில் சில சுயநல எருமைகளைப் பிடித்து—அவர்களுக்கு 'முற்போக்கு எருமைகள்' என்று பட்டம் கட்டி—அந்த எருமைகளைக் கொண்டே காட்டின் சிங்க அரசாங்கம் மறைமுகமாக நடத்தும்மாநாடுதான்இந்த மாபெரும் 'எருமைப்பாடு மாநாடு'!

எருமைகள் படும்பாட்டுக்கு ஒரு தீர்வு காண்பதற்காக சிங்கங்களே ஒழுங்கு செய்துள்ள மாநாடு இது! அயோக்கியச் சிங்கங்களும் துரோக எருமைகளும் நடத்தும் 'கபட நாடகம்' பார்க்க வேண்டுமா? சரி—'எருமைப்பாடு மாநாடு மண்டபத்துக்கு வாருங்கள்...

இதோ! மாநாடு அமைப்பாளர்களின்விசேட அழைப்பின் பேரில் வருகை தந்திருக்கும் திருவாளர் பிலாக்ஸ் பண்டன் என்னும் சிங்க மந்திரி மாநாட்டுக்குத் தலைமை தாங்க வருகிறார். தலைமையுரை ஆரம்பமாகிறது...

"ஹோர்...உர்...உர்...ஓர்" என்ற உறுமலோடு சிங்கப் பாஷையில் தன் தலைமை உரையை ஆரம்பிக்கிறார் மந்திரி. "அன்பர்களே! சிங்கங்களாகிய எங்களிடம் எருமைகளுக்கு எதிரான எந்தப் பேத உணர்ச்சியும் இல்லை. 'சிங்கங்கள்-எருமைகள்' என்று பேசுவதெல்லாம் வகுப்புவாதம். சிங்கங்களாகிய நாங்கள் பெருமைகளாகிய உங்களை எவ்வளவு அன்போடு நேசிக்கிறோம் என்பதற்கு உதாரணமாக-இதோ இப்போது எருமைகளே! உங்கள் பாஷையிலும் ஓரிரு வார்த்தைகள் பேச நான் விரும்புகிறேன்."

இப்படிச் சிங்கமொழியில் கூறிவிட்டு இரண்டு தடவைகள் "உம்பா! உம்பா!" என்று கத்துகிறார் மந்திரி பிலாக்ஸ் உடனே முன்வரிசையில் உட்கார்ந்திருந்த 'பனியன்எருமை' தாங்கமுடியாத மகழ்ச்சியில் நாற்காலியை விட்டுத் துள்ளிக் குதித்து உட்காருகிறது. மந்திரி பிலாக்ஸ் "உம்பா! உம்பா" என்று கத்தியதில் இந்தப் 'பனியன் எருமை'க்குத் தான் எத்தனை மகிழ்ச்சி!

சிங்க மந்திரியின் பேச்சு முடிந்ததா? முற்போக்கு எருமைகள் சங்கத்தின் தலைவர் 'தோழர் எருமைஜி' அவர்கள் இப்போது மாநாட்டின் நோக்கம் குறித்துப் பேச எழுகிறார். கூடவேகரகோஷமும் எழுகிறது.

"தோழர்களே, நாங்கள் முற்போக்கு எருமைகள், சிங்கங்கள் எங்கள் சகோதரர்கள். எருமைகள் சமுதாயத்துக்கு நான் ஒன்று சொல்வேன் — நமக்குப் பரந்த மனப்பான்மைவேண்டும். சிங்கங்கள் நம்மைக் கொன்றாலும் - தின்றாலும் அச்சிங்கங்களோடு சேர்ந்து தான் நாம் நமது உரிமைகளைப் பெறவேண்டும்!"

—இப்படிக் கூறி— இந்த நோக்கத்தை அடைவதற்கு 'எருமைப்பாடு மாநாடு' வழிவகுக்கும் என்பதையும் விளக்கிவிட்டு உட்காருகிறார் தோழர் எருமைஜி. அடுத்து கலாநிதி "எருமை சொர்க்கபதி" மாநாட்டில் பேச முன் வருகிறார்.

"அன்பர்களே, நாம் ஒற்றுமையாக வாழவேண்டும். நமது காட்டுக்கு என்று உள்ள தனிப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவேண்டும். வேற்றுக்காட்டு மிருகங்களின் நாகரிகம் — தலையீடு ஆகியன எவ்வகையிலும் நம் காட்டுக்கு வரவிடக்கூடாது. மேலுமட்டு ஏகாதிபத்திய மிருகங்கள் நமது காட்டுப் பக்கம் வரவோ—அந்த ஏகாதிபத்திய மிருகங்களின் சாயல் நமது காட்டில் படியவோ நாம் விடக்கூடாது!"

இப்படிக் கலாநிதி சொர்க்கபதி எருமையார் கூறியதும், "ஓகோ! ஏகாதிபத்திய இங்கிலாந்துக்காட்டில் 'டாக்டர்' பட்டம் பெற்ற எங்கள் கலாநிதி சொர்க்கபதியாரா? வாழ்க! வாழ்க!! என்று கூட்டத்தில் இருந்த இளம் எருமையொன்று கூச்சலிடுகிறது. மாநாட்டு மேடையிலும் மண்டபத்திலும் சிறிது சலசலப்பு ஏற்பட்டு — பின்பு தொடர்ந்து வழமையான தனது பாணியில் திரும்பவும் பேச்சைத் தொடர்ந்து நிகழ்த்துகிறார் கலாநிதி.

"**யதார்த்தரீதியான தத்துவவார்த்த கண்ணோட்டத்தின் முனைப்புகளின் ஆழ்ந்த முற்போக்கு வித்துவ உணர்ச்சிகளோடு கூடிய வெளிப்பாடுகளின் பிரதிபலிப்பான சகோதரத்துவ அங்கலாய்ப்புகளின் மேல்வாரியான எச்சசொச்ச அடிப்படையின் உள்ளார்த்தங்களை விமரிசன உத்திகளால் அறுபதுகளின் காலகட்டத்தில் சமத்துவரீதியாக...**"

கலாநிதி எருமையாரின் பேச்சு தொடர்ந்துகொண்டேபோகிறது. அவருடைய பேச்சு கூட்டத்திலிருந்த ஏனைய எருமைகளுக்குவிளங்கியதோ இல்லையோ—"ஆகா அற்புதமான பேச்சு!" என்று தங்களுக்குள் பாராட்டிக்கொள்கிறார்கள். "அவர் கலாநிதியாக்கும்— அப்படித்தான் பேசுவார்—விளங்கமுடியாத அளவுக்குஉயர்ந்த தரமான பேச்சு தோழரே இது" என்று கூட்டத்தில் "**விஞேத எருமை**" ஒன்று பக்கத்திலிருந்த முற்போக்குக் குட்டி எருமை ஒன்ருேடு மகிழ்ச்சியை 'சோசலிச' அடிப்படையில் பங்கிட்டுக்கொள்கிறது.

மாநாட்டின் உச்சக்கட்டத்துக்கு இனி வருவோம்-அடடா ஆளும் சிங்க அரசாங்கத்தின் ஒரேயொரு எருமை அமைச்சரான 'மாண்புமிகு 'அகோர சூனியர்' அல்லவா மேடைக்கு வருகிறார்! கைதட்டலைப் பாருங்களேன்—என்னதான் இருந்தாலும் சூனியர் செல்வாக்குள்ள எருமைதான் போங்கள்!!

எருமை அமைச்சர் தடபுடலாக தனது பேச்சை ஆரம்பிக்கிறார்...!

"அன்பர்களே, நான் ஓர் எருமை என்பதை எண்ணி—அதிலும் இந்து சமயத்தைச் சேர்ந்த எருமை என்பதை எண்ணி— உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். எங்கள் கடவுளான சிவபெருமான் மாட்டை வாகனமாகக்கொண்டவர். நாமும் மாடுகள்தான். விஷ்ணுவானவர் ஒருமுறை சிங்கமாக அவதாரம் எடுத்தார். சிம்மவடிவத்தில் விஷ்ணு இரணியனைக்கொன்றார். சிவனும் விஷ்ணுவும் ஒன்று என்பது தான் இந்து மதத்தின் மாபெரும் தத்துவம்ஆகவே, கடவுளுக்கு எருமைகளாகிய நாம் வாகனங்கள் மட்டுமே. ஆனால் சிங்கங்களோ கடவுளின்ஆவதாரங்கள் — நம்மைவிட சிங்கங்கள் உயர்ந்தவர்கள் என்பது இதனால் தெரிகிறதல்லவா? நாம் சிங்கங்களின் கீழ் பணிந்து—அதே வேளையில் ஒற்றுமையாக வாழவேண்டும். எமது உயிரான இந்து சமயம் இதைத்தான் சொல்கிறது! இந்து சமயம் மட்டுமல்ல-ஒற்றுமை பற்றி முற்போக்கு உலகின் முன்னோடியான மனித சமுதாயத்தைச் சேர்ந்த 'கார்ல் மார்க்ஸ்' என்பார் என்ன சொல்கிறார் என்பதை இனிக் கவனிப்போம்!"

—இப்படிச் சொல்லிவிட்டு கார்ல்மார்க்சின் புத்தகம் ஒன்றை எடுத்து ஏதோ ஒரு மேற்கோளை அப்புத்தகத்திலிருந்து படித்துக்காட்ட முயல்கிறார் அமைச்சர்.

"மதம் மக்களுக்கு அபின் மாதிரி" என்று படித்தவர், "ஐயோ மன்னிக்கவும், பக்கம் தவறிவிட்டது" என்று கூறி தடுமாற்றத்துடன் புத்தகங்களின் வேறு பக்கங்களைப் புரட்டித் தனக்குத் தேவையான மேற்கோளைத் தேடித் தடவித் தத்தளிக்கிறார்.

கூட்டத்தில் ஒரு கிண்டல் சிரிப்பொலி அதிர்ந்து வெடிக்கிறது. முன்பு கலாநிதி எருமையார் பேசும் போது கூச்சலிட்ட அந்த உணர்ச்சிமிக்க இளம் எருமையின் சிரிப்பொலியாக அது இருக்கலாம்.

அமைச்சர் அகோர சூனியர் ஒருவாறு இழுத்து சமாளித்து தனது பேச்சை முடிக்கிறார். அவரை அடுத்து பொதுவுடமை எருமை பொன்னம்பல சிதனத்தார் மேடைக்குவருகிறார். (தனது கல்யாணத்தின் போது சீதனம் கேட்டுச் சண்டைபோட்டு 'முற்போக்கு வரலாற்றில்' ஒரு சாதனையை நிலைநாட்டியவர்.) சரி, இனி, தோழர் சீதனத்தார் பேச்சைக் கேட்போம்!

—(அடுத்த இதழில் முடியும்)

**கவரிமான்**

---

## அந்நியரின்...

—7-ம் பக்கத் தொடர்

உங்களால் எங்களுக்கு எதுவித உதவியும் செய்யமுடியாவிடினும்—எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இரத்தம் சிந்தாமல் நீதி நியாயமான ஒரு தீர்வு கிடைப்பதற்கு என்னுடன் சேர்ந்துபிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்—"

---

## முள்ளியவளை இளைஞர்கள் மூவரும் விடுதலை

கடந்த மாதம் மே-22ம் திகதி குடியரசு தினத்திலன்று முள்ளியவளைப் பகுதியில் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த நான்கு மாதங்களாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த, ம. இந்திரநாதன், ச. யோகலிங்கம், அ. இராசரத்தினம் ஆகிய மூன்று இளைஞர்களும் கடந்த3-9-74ல் அட்டோர்னி ஜெனரலின் உத்தரவின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இளைஞர்கள் பேரில் சட்டத்தரணிகளான, அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் மு. ஆலால சுந்தரம் ஆகியோரின் வாதாட்டத்துடனும், வவுனியா, பா. உ. சே. மா. செல்லத்தம்பு அவர்களின் தீவிர முயற்சியுடனும் விடுதலையாயினர்.

கைதாகிய இளைஞர்களை விடுதலை செய்யும் படியும், மிருகத்தனமாகத் தாக்கிய முல்லைத் தீவுப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் போக்கைக் கண்டித்தும் முள்ளியவளையிலுள்ள பாடசாலைகள் ஒருநாள் பகிஷ்கரிப்பை நடத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## சிவகுமார் என்றிடும் போதினிலே...

—2ம் பக்கத் தொடர்

"அங்கே போகாதே...மின்சாரம் பாய்கிறது..." என்று கூறியபடி சிவகுமாரனை இழுத்துப் பிடித்துக் கொள்ளுகிறார்கள் அவனது நண்பர்கள்!

"என்னைக் காப்பாற்ற யாருமில்லையா...?" என்று குரலெழுப்பிய படி சிவகுமாரனின் கண்முன்னே உயிர் விடுகிறான் அந்தப் பதினான்கு வயதுப் பாலகன்!

இந்தக் காட்சியைக்கண்ட பின்னர் சிவகுமாரன் உன்மத்தம் பிடித்தவன் போலாகிறான்! அவனது இரத்த நாளங்கள் கொதித்துப் புடைத்தெழுகின்றன...!

"பழிக்குப்பழி ...பழிக்குப் பழி" இவ்வாறு அவன் வாய் முணுத்திருக்கவேண்டும்...

கீழே குனிகிறான் — தமிழ் மண்ணில் தனது கைகளால் அடித்து ஏதோ உறுதியெடுத்துக்கொள்ளுகிறான்!

பேயறைந்தவன்போல — வெறிச்சோடிய உள்ளத்தினனாக—அன்றிரவு வீடு திரும்பினான் சிவகுமாரன்.

—கோவை.

---

## இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் வேண்டுகோள்!

தமிழ் வளர்ச்சிக்காகவும், இங்கிலாந்தில் தமிழனின் தனித்தன்மையை பேணிக் காப்பதற்காகவும் பாடுபட்டுழைத்து வரும் இலண்டன் தமிழ்ச் சங்கத்தினர், இப்போது சங்கத்துக்கென சொந்தத்தில் ஓர் கட்டிடத்தை வாங்கும் திட்டத்தை துவக்கி, அதற்கென நிதி திரட்டி வருகிறார்கள். இந்த தமிழ்ப் பணிக்கு நிதி உதவி புரிய விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு தங்கள் அன்பளிப்புக்களை அனுப்பிவைக்குமாறு லண்டன் தமிழ்ச்சங்கச் செயலர் திரு. ஆ. க. சுப்பிரமணியம் கோருகிறார்.

இலண்டன் தமிழ்ச் சங்கம்,
17, MEDLAR HOUSE,
LONG LANDS ROAD,
SIDCUP,
KENT, U. K.

# அந்நியன் இங்கு நுழைவதற்கு முன்னர் இந்நாட்டை ஆண்ட பரம்பரையினர் நாம்!

பண்டாரநாயகா ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுநல அரசுகளின் சர்வதேச பாராளுமன்ற மாநாட்டின் போது செப்டம்பர் 12ம் திகதி தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும் சாவகச்சேரி பா. உ.வுமான திரு. வ.ந.நவரத்தினம் அவர்கள் ஆற்றியஉரை முழுதும் இங்கு இடம் பெற்றுள்ளது. இரண்டாவது தடவையாக அவர் ஆற்றியஉரை இதுவாகும். முதலாவது உரை ஏற்கெனவே சுதந்திரனில் இடம்பெற்றிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

தலைவர் அவர்களே, இங்கு விவாதிக்கப்படும் விஷயம் ("காமன் வெல்த்தில் அங்கம் வகிக்கும் சிறிய நாடுகளின் பிரச்சினைகள்) மிகவும் விரிவானது—இதையொட்டி தனக்குத் தரப்பட்டிருக்கும் பத்து நிமிடங்களுக்குள், எந்த ஒரு பிரதிநிதியாலும் உருப்படியான கருத்துக்களை முன்வைப்பதென்பது முடியாத காரியம். அதன் காரணமாக, எனது நாடும், காமன் வெல்த்திலுள்ள ஏனைய பல நாடுகளும் பங்கு கொண்டுள்ள இப்பிரச்சினையின் ஒரேயொரு அம்சத்தை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

களுக்கு அளப்பரிய மரியாதையும் அன்பும் உண்டு. நான் உங்களுடன் பேசிக்கொண்டிருக்கும் இந்த மொழி உட்பட — அவர்கள் எங்களுக்கு தந்த நல்லனவற்றுக்கெல்லாம் நாம் நிச்சயமாக நன்றி கூறுகிறோம். பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள்

எங்களுக்கு மொழிப்பிரச்சினை இருக்கவில்லை, இனப்பிரச்சினை இருக்கவில்லை; மதப்பிரச்சினை இருக்கவில்லை. தமிழர்களும் சிங்களவர்களும் சகோதரர்களாக வாழ்ந்தார்கள். தமிழ் இராச்சியத்தில் தமிழ் அரசு மொழியாக இருந்தது. இரண்டு சிங்கள இராச்சியங்களிலும் சிங்களம் அரசுமொழியாக இருந்தது. தமிழ் அரசும் சிங்கள அரசுகளும் ஒன்றின் இறைமையையும் தன்னுதிக்கத்தையும் மற்றென்று மதித்து, அங்கீகரித்து இயங்கி வந்தன.

நீங்களும் (பிரிட்டிஷ்) டச்சுக்காரர்களும், போர்த்துக்கீயரும், உங்கள் அதிகாரத்தை மேலும் விரவுபடுத்தவும், உங்கள் பொருளாதாரத்தை வளர்க்கவும் எங்கள் நாடுகளைக் கைப்பற்றினீர்கள். போர்த்துக்கீயரும், டச்சுக்காரர்களுமாவது—தாங்கள் கைப்பற்றிய அரசுகளை,

பிரபு தம்முடைய வார்த்தைகள் மூலம் அங்கீகரித்திருந்தாலும்—ஆணைக்குழுவினர் சிறுபான்மையினர் பாதுகாப்பு பற்றி கண்ணும் கருத்துமாக இருந்தபோதிலும்—சிறுபான்மை மக்களின் திருப்தி சிறுபான்மை மக்களின் நல்வாழ்வுக்கு மட்டுமன்றி நாடு முழுவதற்கும் அவசியமானது என்பதை தாம் உணர்ந்து கொண்டிருப்பதாக அப்போதிருந்த இலங்கை அமைச்சர் குழு அளித்த வாக்குறுதியை ஏேயல் ஆணைக்குழு நம்பியது; அதில் ஏடுபட்டது.

அரசியல் சட்டம் செயல்படும்போது — சிறுபான்மை மக்கள் பற்றி அமைச்சர் குழு அளித்த வாக்குறுதிகள் கௌரவிக்கப்படவில்லை என்பதை சோல்பரி பிரபு அறிந்து ஏமாற்றமடைந்

உண்மையை நீங்களும் அங்கீகரித்து — ஏனைய காமன் வெல்த் நாடுகளும் இப்பிரச்சினையின் பின்னணியிலுள்ள வரலாற்று அம்சத்தைப் புரிந்து கொள்வார்களாயின் —இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் நாங்கள் நெடுந்தூரம் முன்னேறி விடுவோம்!

இதைப்பற்றி அன்றுகுறிப்பிட்ட எனது நல்ல நண்பர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா — பங்களாதேஷுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான பிரச்சினை, இந்தியா —பாகிஸ்தான் பிரச்சினை போன்ற பெரிய, கஷ்டமான பிரச்சினைகள் யாவும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டிருக்கும்போது— இதையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதில் கஷ்டம் இருக்கமுடியாதென்று தெரிவித்தார்.

## தமிழினம் அடைந்துள்ள சீரழிவுக்கு பிரிட்டிஷார் செய்த தவறே காரணம்!

எங்கள் பிரச்சினைகளின் இயல்பிலும் அளவிலும் வேறு எவ்வளவுதான் வேறுபாடுகள் இருந்தபோதிலும் —ஐக்கிய இராச்சியம் ஒன்றைத்தவிர—இங்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் சகல நாடுகளுக்கும் பொதுவான ஒரு அம்சம் இருக்கிறது. அதாவது—ஏதோ ஒரு கால கட்டத்தில் நாமெல்லாம் பிரிட்டிஷ் காரர்களால் ஆளப்பட்டிருக்கிறோம். காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கின்ற சில நாடுகளில் ஏற்பட்டுள்ள சில பல பிரச்சினைகள் வரலாற்றிலுள்ள அக்கால கட்டத்தின் விளைவாகவே தோன்றியுள்ளன.

இலண்டனிலே தொழில் செய்து வாழ்ந்து வருவதையும், இந்த மக்களின் உழைப்பினால் யாழ்ப்பாணத்தில் பல குடும்பங்கள் இயங்கி வருகின்றன என்பதையும் இலங்கைத் தமிழர்களாகிய நாம் மறந்துவிடவில்லை.

ஆனால் உண்மைகள் உண்மைகளே. நான் இதைச் சொல்வதற்கு எவ்வளவு தயங்கினாலும் —இந்நாட்டுத் தமிழ் மக்களின் துன்பமும் அவதியும் சூழ்ந்த இன்றைய அவல நிலைக்குப் பொறுப்பாளிகள் பிரிட்டிஷ் காரர்களே என்று நான் உங்களுக்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

அந்த அரசுகளின் எல்லைக்கோடுகளும், தனித்தன்மையும், அந்த அந்த அரசுகளில் வாழ்ந்து வந்த மக்களின் பண்பாடுகளும் பழக்கவழக்கங்களும் சட்டங்களும் அழிந்துபோகாதவாறு தனித்தனியே அவற்றை நிர்வகித்துவந்தார்கள். ஆனால் பிரிட்டிஷ்காரர்களாகிய நீங்களோ, உங்கள் வசதிக்காக மூன்று அரசுகளையும் ஒன்றாக அணைத்தீர்கள். வெஸ்ட்மினிஸ்டர் ஆட்சியாளர்களின் வசதிக்காக நாட்டின் நிர்வாகத்தில் இன்னும் பல மாற்றங்களை கொண்டு வந்தீர்கள். மேற்கொண்டும்

தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பின், பல ஆண்டுகள் கழித்து, பேராசிரியர் டி. எச். பாமர் எழுதிய "இலங்கை—பிளவுபட்ட நாடு" எனும் நூலுக்கு அளித்துள்ள முன்னுரையில் சோல்பரி பிரவு பின்வருமாறு கூறியுள்ளார்:-

"வெகுகாலமாக இந்த இரு இனங்களுக்குமிடையே இருந்துவந்த பகைமையைப் பற்றி ஆணைக்குழு மேலெழுந்த வாரியாகவே அறிந்திருந்தது. பலநூற்றாண்டுகளாக இவ்விரு இனங்களுக்குமிடையில் இருந்து வந்த பகைமையை எடுத்துக்

அவர் இவ்வாறு கூறியது வெளிநாட்டாரை திருப்திப்படுத்துவதற்காக அல்ல— தமது உள்ளத்திலிருந்து விசுவாசமாகவே அவர் கூறியிருக்கிறார் என்று நம்புகிறேன். ஏனெனில், இந்த வழியையே எனது மதிப்புக்குரிய தலைவரும் தமிழ் ஈழத்தின் காந்தியுமான திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் கியூ. சி. பல ஆண்டுகளாக பின்பற்ற முயற்சித்து வருகிறார்.

தமிழ் மக்கள் மீது புதிய அரசியல் சட்டம் திணிக்கப்பட்ட சில நாட்களின் பின்னர் — ஏறத்தாழ இரண்டு

## பொதுநல அரசு பாராளுமன்ற மாநாட்டில் கடமை வீரர் நவரத்தினம் விடுதலை முரசம்!

சிலநாட்களுக்குமுன்னர்— ஒரு பிரதிநிதி — கனடாவிலிருந்து வந்திருப்பவர் என நினைக்கிறேன் — என்னிடம் கூறினார்—"நான் இந்த நாட்டில் சில நாட்கள் மட்டுமே இருக்கிறேன். இதற்குள் போர்த்துக்கீயர் ஆட்சியின் தாக்கத்தை நான் இங்கு அவதானித்தேன். பேரேராக்களும், பெர்னாந்துகளும் கத்தோலிக்க தேவாலயங்களும், எல்லாம் போர்த்துக்கேய ஆட்சியின் சாட்சியங்களாக விளங்குகின்றன. டச்சுக்காரர் தங்கள் தனித்துவமான கட்டிடங்களையும், கோட்டைகளையும், அகழிகளையும் தம் நினைவுச் சின்னங்களாக விட்டுச்சென்றுள்ளனர். ஆனால் நீண்டகாலமாக ஆட்சிசெய்த பிரிட்டிஷ் காரர்கள், தங்கள் ஞாபகமாக சில வீதிகளின் பெயர்களையும் இரண்டொரு சிலைகளையும் தவிர வேறு எதையும் விட்டுச்சென்றதாகத் தெரியவில்லை." — இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தலைவர் அவர்களே இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் மானம் மரியாதையுடன் வாழ்வதற்காகநடத்திவரும் கசப்பான போராட்டங்களைப் பற்றி நான் அன்று இவ்வரங்கில் பேசியபோது குறிப்பிட்டேன். விராரணையின்றி சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள்— அவர்களில் பலர் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்கிறார்கள்— அந்த இளைஞர்கள் அனுபவிக்கின்ற கொடுமைகளையும் துன்பங்களையும் பற்றி எடுத்துரைத்தேன்.

எம்மை ஆள்வதில், எதுவித இலாபமுமில்லையென்றோ, அல்லது வசதியில்லையென்றோ நீங்கள் கருதியபோது—நீங்கள் வெளியேறினீர்கள்.

எங்கள் புகார் என்ன வென்றால்—நீங்கள் வெளியேறிய சமயத்தில் நீங்கள் அதுவரை ஆட்சிபுரிந்த மக்கள் ஒவ்வொருவரினதும் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும உறுதிசெய்திருக்கவேண்டும். அப்படிச்செய்யாவிடின் — நீங்கள் எங்கள் நாடுகளை கைப்பற்றியபோது எந்த நிலைமையிருந்ததோ— அந்த நிலைமையில் எங்களை விட்டுச் சென்றிருக்கவேண்டும்!

காட்டுகின்ற திரு. பாமருடைய இந்த நூல் எங்களுக்கு அப்பொழுதே கிடைத்திருக்குமாயின் நாங்கள் இனப்பிரச்சினை தீர்க்கப்படுமென்பதில் அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்திருக்க மாட்டோம். இதனால் (எமது அறிக்கையால்) ஏற்பட்ட பலாபலன்கள் எனக்கு ஏமாற்றமாக இருந்தது என்பதை சொல்ல வேண்டியதில்லை."

தயவுசெய்து நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் — சோல்பரி பிரபு கோரியுள்ள மன்னிப்பும், தெரிவித்துள்ள வருத்தமும் தனிப்பட்ட

ஆண்டுகட்கு முன்னர், சிறுபான்மை பிரச்சினைகளுக்கு தீர்வு ஒன்றைக்காணும் முகமாக தமிழ் மக்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளையிட்டு விவாதிப்பதற்காக தமக்கு ஒருசந்தர்ப்பத்தைத் தரும்படிகோரி பிரதமருக்கு திரு. செல்வநாயகம் கடிதம் எழுதியிருந்தார். இன்று வரை அதற்கு அவருக்கு வாய்ப்புத் தரப்படவில்லை.

இந்நாட்டு சிறுபான்மை மக்களின் பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் உடன்பாடு காணப்படக் கூடியதொன்றல்ல—என்று தேசிய அரசுப்பேரவையில் மாண்புமிகு அரசியலமைப்பு அமைச்சர் (டாக்டர் கொல்வின்) தெரிவித்த கருத்துக்கு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இங்கு தெரிவித்த கருத்து முரண்படுவதாக உள்ளது.

## அரசியலமைப்பு அமைச்சர் கூற்றும் பீலிக்ஸ் கருத்தும் முரண்படுகிறதே!

ஆனால், சீமான்களே, சீமாட்டிகளே, எங்களுடன் நீங்கள் மேலும் சிலகாலம் தங்கியிருந்து இலங்கையின் தோட்டப் பகுதிகளுக்கும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் செல்வீர்களானால், தீர்வுகாண்பதற்கு கஷ்டமான சில பிரச்சினைகளை பிரிட்டிஷ்காரர்கள் இங்கு விட்டுச்சென்றுள்ளதை அவதானிக்கத் தவற மாட்டீர்கள்.

உண்மையில் எனது பிரிட்டிஷ் நண்பர்களை— அதுவும் அவர்கள் எங்கள் மண்ணில் இருக்கும் இச் சமயத்தில் நான் கண்டிக்க விரும்பவில்லை. அவர்கள் மீது எங்

எங்களை ஆண்ட அந்நியர்கள்—இங்கு வராதிருந்திருந்தால்—எங்களை மட்டுமல்ல —இந்த நாடு முழுவதையுமே பாதிக்கின்ற இப்பிரச்சினையே தோன்றியிருக்காது.

பிரிட்டிஷ் காரர்களும் ஏனைய அதிகார வெறி பிடித்த ஐரோப்பிய நாடுகளாகிய டச்சுக்காரர்களும் போர்த்துக்கீயர்களும் எங்கள் நாட்டுக்கு வந்து ஆயுதப் போரில் எங்களை கைப்பற்றுவதற்கு முன்னர்—நாங்கள் ஆனந்தமாக வாழ்ந்து வந்தோம்.

அரசியல் சட்ட சீர்திருத்தம் சம்பந்தமான ஆலோசனைகளை சிபார்சு செய்வதற்காக சோல்பரி பிரபு தலைமையில் நீங்கள் ஒரு ஏேயல் ஆணைக்குழுவை அனுப்பினீர்கள். நடுநிலையாளர்களாகிய பிரிட்டிஷாரிடமிருந்து அதிகாரம் இந்நாட்டு மக்களுக்கு செல்லும் சமயத்தில், இந்நாட்டிலுள்ள சிறுபான்மை சமூகங்களின் உள்ளத்தில் பொதுவாக எழுந்த ஐயக் கிலேசங்களையும் சோல்பரி

முறையில் அவருடையதல்ல —ஒவ்வொரு பிரிட்டிஷ் பிரஜையின் சார்பிலும்கேட்கப்பட்ட மன்னிப்பு அதுவாகும்.

எனவே இன்று நாம் வாழ்ந்துகொண்டு இருக்கும் துன்பமான சூழ்நிலைக்கு பொறுப்பாளிகள் — ஐக்கிய இராச்சியத்திலிருந்து வந்துள்ள என்னுடைய நல்ல நண்பர்களே. இதை ஏன் நான் இங்கு வலியுறுத்துகிறேன் என்றால் — இந்த

எனவே சீமான்களே, சீமாட்டிகளே தயவு கூர்ந்து எங்கள் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள முயலுங்கள் —எங்கள் பிரச்சினைகளைப் பற்றி விளக்கும் ஒரு சிறு மகஜரை உங்கள் எல்லோருக்கும் எங்கள் தலைவர் திரு. செல்வநாயகம் அனுப்பியுள்ளார். எங்கள் பிரச்சினையை நீங்கள் புரிந்துகொண்டு—

—6-ம் பக்கம் பார்க்க

 தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# எதிரிபடைகளால் முற்றுகையிடப்பட்டதுபோல்

# காட்சியளிக்கிறது யாழ்ப்பாணம்!

## பொலிசார் தங்குவதற்காக கல்லூரிகளுக்கு மூடுவிழா
## பிரதமர் விஜயத்தை முன்னிட்டு நடைபெறும் ஏற்பாடுகள்!

யாழ்ப்பாண குடாநாடு எதிரிப்படைகளால் முற்றுகையிடப்பட்ட நகரமாக காட்சியளிக்கிறது. 2000 க்கும் அதிகமான பொலிஸ், இரகசிய பொலிஸ், இராணுவம் குவிக்கப்பட்டு இருக்கிறது. இவர்கள் தங்குவதற்கு பிரபல கல்லூரிகள் மூடப்பட்டு வருகின்றன. கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை ஏற்கனவே அதிகாரிகள் மூடிவிட்டார்கள். உரும்பிராய் பட்டினத்தில் தற்காலிக பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. சந்திகள் தோறும் ஆயுதந்தாங்கிய காவல் படையினர் காவல் புரிகின்றனர்.

பிரதமர் வருகையையிட்டு ஒழுங்குபடுத்தப்படும் பொதுக்கூட்டத்திற்கு ரூபா 10000/- செலவில் கல்லால் தற்காலிக மேடை பலத்த கட்டுக்காவலுடன் கட்டப்பட்டு வருகிறது.

துரையப்பா ஸ்ரேடியத்தை சுற்றி தற்காலிக மின்சார விளக்குகள் பொருத்த கம்பங்கள் பல நாட்டப்பட்டுவிட்டன. கோட்டை முனீசுவரர் ஆலயத்துக்கு எதிரே இருந்த ஆலமரமும் பாதுகாப்பு காரணமாக பாதி வெட்டப்பட்டுவிட்டது.

தமிழ் இளைஞர் பேரவை இளைஞர்களும் பாதுகாப்புக் காரணமாக பொலிசாரால் நாள்தோறும் கைதுசெய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

யாழ் மாநகரசபை பொது வரவேற்புக் கொடுக்கும் நிகழ்ச்சி பிரதமரின் 3 நாள் நிகழ்ச்சி நிரலில் இல்லை. வரவேற்பு ஏற்பாடுகளை அரசாங்க அதிபரே நேர் நின்று கவனித்து ஆவன செய்கிறார். இதன்மூலம் யாழ் மேயர் துரையப்பாவுக்கு அரசு முகத்தில் கரிபூசிவிட்டதாக பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

ஆனால் துரையப்பர் சளைக்காமல் இராமநாதன் சிலையை யாழ் மாநகரசபை முன்றலில் கட்டுவிப்பதன் மூலம் பிரதமரை மாநகரசபை வளவுக்குள் கொண்டு வந்து அதைத் திறக்க திட்டமிட்டிருக்கிறார்.

கூட்டுறவு கூலிப்பட்டாளங்களுக்கு யாழ் நகரை தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது அலங்கரித்தது மாதிரி அலங்கரிக்குமாறு துரையப்பர் கட்டளை பிறப்பித்திருக்கிறாராம்.

கல்வி அதிபதியும் பள்ளி மாணவர்களை சீருடை அணிந்து வருமாறு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாக அறிய வருகிறது.

இதற்கிடையில் பிரதமர் வருகைக்கு எதிராக அசுர வேகத்தில் இளைஞர்பேரவை இளைஞர்கள் சூறுவளிப்பிரசாரம் செய்துவருகிறார்கள்.

பொதுமக்கள் கூட்டுறவு ஊழியர்கள் அரசாங்க அதிகாரிகள், பொலிஸ், இராணுவத்தினர்களது வரவேற்பு பிரதமரைக் காத்திருப்பதாக பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

—வணங்காமுடி


கடைசி வாரம்

செல்லமகால்

ஜெய்சங்கர் • ஜெயலலிதா (இரட்டை வேடங்கள்) • எம்.என். ராஜம் • புஷ்பலதா • சோ, ரி.கே. பகவதி நடித்த

வந்தாளே மகராசி

அக்டோபர் 4-ந் திகதி முதல்

செல்லமகால் தியேட்டரில்

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—

கே. பாலசந்தரின்

எதிரொலி

கடைசி வாரம்

கெபிட்டி

ஜெயசங்கர், சுந்தரராஜன், விஜய கிரிஜா, மனோரமா, ஸ்ரீகாந்த், தேங்காய் சீனிவாசன், புதுமுகம் கவிதா, ஷப்னம், ஆகியோர் நடித்த—

தமிழ்வாணன் தரும்

காதலிக்க வாங்க

டைரக்ஷன்: ஐ.என். மூர்த்தி

2-வது வாரம்

பிளாஸா திரையில்

சிவாஜி ஜெயலலிதா, சௌகார் ஜானகி, சந்திரபாபு -நடித்த-

நீதி

[ஈஸ்ட்மென் கலர்]

2-வது வாரம்

கிங்ஸ்லி

எம். ஆர். ராதா, எஸ்.எஸ். ராஜேந்திரன், ஸ்ரீரஞ்சனி, —நடித்த—

ரத்தக் கண்ணீர்

வெலிங்டன் (யாழ்நகர்)

எம்.ஜி. ஆர். சரோஜா தேவி நடித்த-

பெற்றால்தான் பிள்ளையா

3வது வாரம் லிடோ (யாழ்நகர்)

ஷஷிகபூர், ராக்கி நடித்த-

சர்மிலீ

கலர்

எமது அடுத்த வெளியீடு

வெகு விரைவில்

சினிமாஸ் திரைகளில் எதிர்பாருங்கள்

சண்முகப்பிரியா


இப்பத்திரிகை சுதந்திரன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, நாயகா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் செப்டம்பர் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு ப்பிரசுரிக்கப்பட்டுள்ளது.